விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு ——— Valampurii ———

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 16 வெள்ளிக்கிழமை (02.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287




# ஈழத் தமிழரின் பிரச்சினையை ஆராய சென்னைக்கு விரைகின்றார் சிதம்பரம்



## ★ கருணாநிதியுடன் பேசுவார் ★

(புதுடில்லி)

ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்து தமிழ்நாடு முதல்வருடன் பேச்சு நடத்த இந்திய மத்திய அரசு தனது உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை ஓரிரு நாள்களில் சென்னைக்கு அனுப்பவுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டி.ஆர்.பாலு நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசிய பின்னர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாதிக ஹெல உறுமய நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (ச-5)

## புலிகளுக்கு தார்மீக ஆதரவு வழங்குவதை தடுக்கும் சட்டம் நீதிமன்ற விசாரணையில்

(வாஷிங்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புக்கள் என வரையறுக்கப்பட்ட இயக்கங்களுக்கு அமெரிக்கக் குடிமக்கள் தார்மீக ஆதரவு வழங்குவதைத் தடை செய்யும் சட்டத்தின் செல்லுபடித்தன்மை குறித்து விசாரணை செய்வதற்கு அமெரிக்க உச்ச நீதிமன்றம் தயாராகி உள்ளது.

அமெரிக்க நாட்டுப்பற்றுச் சட்டம் என்ற இந்தச் சட்டம் வாஷிங்டன் அரசுக்கு பரந்தளவிலான அதிகாரங்களை அள்ளி வழங்குவதாக மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டத்தை எதிர்த்து லொஸ் ஏஞ்சல்ஸ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனித உரிமை அமைப்பு ஒன்று தாக்கல் செய்த வழக்கில், சட்டம் அமெரிக்க அரசியலமைப்புக்கு மாறாக (14ஆம் பக்கம் பார்க்க)

## மினிக்கச்சேரி நடத்தியவர்களை காட்டிக் கொடுத்த வீதி விபத்து

### 9 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மினிக்கச்சேரி நடத்தியவர்கள் மற்றும் சட்டவிரோதமாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று பயன்படுத்தியவர்கள் என 9 பேர் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்து, குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றினை விசாரணை செய்தபோது சட்ட விரோதமாகப் பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் பயன்படுத்திய ஒருவரை யாழ். போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடிகளை அகற்றும் பணிக்கு ஐ.நா. 5 மில்லியன் டொலர் உதவி

(கொழும்பு)

வடபகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் அரசின் செயற்பாடுகளுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் 5 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கி உள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை விரைவுப்படுத்தும் நோக்கத்துடன் இந்த உதவி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

ஜெனீவாவில் இலங்கை மனித உரிமைகள் மற்றும் பேரிடர் நிவாரண அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதுவர் அன்டனியோ கட்ரஸ் ஆகியோருக்கு இடையே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுக் (14ஆம் பக்கம் பார்க்க)

## கால நிலையில் திடீர் மாற்றம்

## நாட்டின் பல பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை!

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் நேற்று ஏற்பட்ட காற்றுடன் கூடிய மழைவீழ்ச்சி காரணமாக பெருமளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஹற்றன் பிரதேசத்திலேயே அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. காற்றுக் காரணமாக இந்தப் பிரதேசங்களில் அதிகளவிலான வீடுகள் சேதமடைந்துள்ளதாக நுவரெலிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத் தொடர்பாளர் ஜனந்த ஹேமவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பேராதனை வீதி கிங்ஸ்வுட் கல்லூரிக்கு அருகில் சிற்றூர்ந்து ஒன்றின் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் சிற்றூர்ந்து முற்றாக சேதமடைந்துள்ளது. எனினும் சம்பவத்தின் போது குறித்த சிற்றூர்ந்தில் எவரும் இருக்கவில்லை (14ஆம் பக்கம் பார்க்க)


## தீவகத்தைச் சேர்ந்த 600 பேர் இன்று வருவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் தீவகத்தைச் சேர்ந்த 600 பேர் இன்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்படுவார்கள் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இவ்வாறு அழைத்துவரப்படும் மக்கள் இன்று வேலணை, காரைநகர் இடைத்தங்கல் முகாம்களில் (14ஆம் பக்கம் பார்க்க)


## பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவை சந்திக்க மறுத்த றொபேர்ட் ஓ பிளேக்!



(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை ராஜாங்க செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திக்க முயற்சித்த போதிலும் கோத்தபாயவுடன் தொலை பேசியில் உரையாடுவதைக் கூட பிளேக் நிராகரித்துள்ளார் என தெரியவருகிறது.

பிளேக் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக பணியாற்றி வந்துள்ளார் அவர் இலங்கையில் தூதுவராக பணியாற்றிய போது கோத்தபாய அவரை பயங்கரவாதி ஒருவரை போன்று கருதியே செயற்பட்டு (14ஆம் பக்கம் பார்க்க)



## ஏற்றுமதி வரிச் சலுகை நீக்கப்பட்டு விட்டது

### ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வந்த ஏற்றுமதி வரிச் சலுகை நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைஅடுத்து நீக்கப்பட்டு விட்டதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எல்.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

புகையிரத தொழில் நுட்பவியலாளர்கள் தொழிற்சங்கத்தின் முதலாண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஏற்றுமதி வரிச் சலுகையை அரசு தொடர்ந்து பெற வேண்டுமானால் மனித உரிமைகளைப் பேணிக் காக்க வேண்டும்.

ஏற்றுமதிவரிச்சலுகை நீக்கப்பட்டது அனைத்துலகச் சதி என அரசு கூறுகின்றது. அந்தச்சதியை வெற்றி கொள்வதற்கு தென்மாகாண சபையின் 85 வீத (14ஆம் பக்கம் பார்க்க)

## லொறிச் சேவைக்கு அனுமதிக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள லொறிகளை ஏ-9 வீதியூடான சேவைக்கு அனுமதிக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளார்.

இத்தகவலை யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இது தொடர்பில் யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது, யாழ். மாவட்டத்திலுள்ள லொறிகளை ஏ-9 வீதியூடான சேவையில் ஈடுபட பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும். இதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பாதுகாப்பு அமைச்சிற்கு விண்ணப்பித்துள்ளார். அத்துடன் ஏ-9 பாதையூடான சேவையில் ஈடுபடும் யாழ். மாவட்ட லொறிகளுக்கு தகைமைச்சான்றிதழ் கொழும்பில் பரிசோதனை செய்து பெறப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கொழும்பு கொண்டு சென்று லொறி தகைமைச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்றார் (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு, கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான புத்தாக்கக் கண்காட்சியும், போட்டியும் நிகழ்வு வடமராட்சி கல்வி வலயத்தின் அனுசரணையுடன் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறுவர்களும், பாடசாலை மாணவர்களும் மேற்படி போட்டியில் தத்தமது புத்தாக்கங்களுடன் சமுகமளித்து பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

## வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற விண்ணப்பப் படிவங்கள் விநியோகம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் பணியகத்தினால் நேற்று கிராம சேவகர்களிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கு ஆட்களை பதிவு செய்யும் நாடளாவிய ரீதியான நிகழ்ச்சித்திட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போதே கிராம சேவகர்களிடம் அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேனாவால் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

பிரதேச செயலர், கிராம சேவகர்களின் ஆலோசனைகளுடன் பூரணப்படுத்தப்பட்ட இவ் விண்ணப்பப்படிவங்களை பெற்று 2009 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி அமைச்சுக்கு அனுப்பிவைக்கலாம்.

மேலும் www.empro.gov.lk என்ற இணையத்தளம் ஊடாகவும் பதிவு செய்து கொள்ள முடியும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார். (ச-7)

## கூடைப் பந்தாட்டச் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை காலை 8 மணிக்கு யாழ்.பிரதம தபாலகத்திற்கு அண்மையிலுள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் சங்கத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்கு காலை 9 மணிக்கு நடைபெறும்.

எனவே நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் அனைத்துக் கழகங்களும் தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ச-3)



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஆட்களைப் பதிவு செய்யும் நாடளாவிய ரீதியான நிகழ்ச்சித் திட்டம் நேற்று யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், அமைச்சின் மேலதிக செயலாளர் சியான் நாணயக்கார ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கலை விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலையும் அபிவிருத்திச் சங்கமும் தமிழ் மன்றமும் இணைந்து நடத்தும் கலை விழா நாளையும் நாளை மறுதினமும் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சி.குகநேசனும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜாவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச-3)

## திருச்சுரூப ஊர்தி மடு நோக்கிப் பயணம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 28 ஆம் திகதி புறப்பட்ட யேசுவின் திருப்பாடுகளின் திருச்சுரூபங்கள் அடங்கிய ஊர்திகள் நேற்று புத்தளம் ஊடாக மடுவை நோக்கிச் சென்றன.

புத்தளம் தில்லையடியை நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு வந்தடைந்த திருச்சுரூப ஊர்தி அங்குள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

அச் சமயம் ஏராளமான பக்தர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர். வீதியோரங்களில் நின்ற பக்தர்கள் மலர்தூவி தமது பக்திப் பரவசத்தை வெளிப்படுத்தினர். (ச-5)

## பாலியல் துன்புறுத்தல்களுக்கெதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

### இலங்கைக்கு நெருக்கடி என்கின்றனர் ஆய்வாளர்கள்

(கொழும்பு)

போர் நடைபெறும் இடங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஏகமனதாக நிறைவேற்றி உள்ளது.

ஏற்கெனவே போர் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டு வரும் இலங்கை அரசுக்கு ஐ.நா வின் இந்தத் தீர்மானம் மேலும் நெருக்கடிகளைக் கொடுக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயுத மோதல்கள் நடைபெறும் இடங்களில் பாலியல் வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவரும் வகையில் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை ஐ.நா பொதுச் செயலாளர் நியமிக்க வேண்டும் என்று பாதுகாப்புச் சபைத் தீர்மானம் கோருகின்றது. அந்தப் பிரதிநிதி மோதல் பிரதேசங்களில் இடம்பெறும் பாலியல் வன்முறைகளைத் தடுப் பதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பவராகவும் தலைமையேற்று நடத்துபவராகவும் இருக்க வேண்டும் என்றும் அது தெரிவிக்கின்றது.

பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளை வழங்குவதுடன் அவர்களுக்கு எதிரான குற்றம் புரிந்தவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவியை அமெரிக்கா வகிக்கும் இறுதி நாள் நேற்று முன்தினம் முடிபடைந்தது. இதில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கிலாறி கிளின்ரன் சபைக்குத் தலைமை தாங்கினார். அப்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு உரையாற்றிய கிலாறி கிளின்ரன் கொங்கோ குடியரசில் ஒவ்வொரு மாதமும் ஆயிரத்து 100க்கும் அதிகமான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனக் குறிப்பிட்டார். கடந்த ஜூலையில் அந்த நாட்டுக்குத் தான் மேற்கொண்ட பயணத்தின் போது அவர்களில் சிலரைச் சந்தித்து பேசியதாகவும் அவர் தெரிவித்தார்.

போர் நடைபெறும் இடங்களில் பெண்களும் சிறுவர்களும் பாலியல் துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கு இந்தப் புதிய தீர்மானம் ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு வழி ஏற்படுத்திக்கொடுக்கும் எனவும் கிலாறி கிளின்ரன் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தின் படி பெண்கள், சிறுவர்களுக்கு எதிராகக் திட்டமிட்டு பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் தடைகள் விதிக்கப்படலாம்.

அதுமட்டுமல்லாது இலங்கை, பர்மா போன்ற ஆசிய நாடுகளிலும் பால்கன் நாடுகளிலும் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் போரின் போது ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது என அமெரிக்காவின் குரல் வானொலி (Voice of America) கூறுகின்றது. (ச-5)

## புலிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க டென்மார்க்குடன் இலங்கை பேச்சு

படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு நடவடிக்கைகளை வழங்குவது தொடர்பாக டென்மார்க் நாட்டின் நீதித்துறை அமைச்சர் ஈ.எம்.எச்.கிர்ச் பாலினை நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புத் துறை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேசியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நீதித்துறை வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான இலங்கை அரசின் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகக் கொழும்பில் நீதி அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க் அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இரு நாடுகளுக்கும் இடையில் நீதித்துறை ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புக்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

நீதிபதிகள், சட்டவாளர்கள், சிறைத்துறை அதிகாரிகள் ஆகியோரின் ஆளுமையை மேம்படுத்துவதில் டென்மார்க் நாட்டின் உதவியை பெறுவதும் அதில் உள்ளடங்கும். போரின் பின்னர் இலங்கை அரசு எதிர்நோக்கி வரும் சவால்கள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட டென்மார்க் நீதி அமைச்சருக்கு எடுத்து விளக்கினார் எனவும் அமைச்சு அறிக்கை கூறுகின்றது. (ச-5)

ஸ்ரீ ராஜ் J.P

சகல விதமான கடிதங்களும் படிவங்களும் ஆங்கிலத்தில் ரைப்பிங் செய்து தரப்படும்.

பிரதான வீதி,
சித்தன்கேணி.
(மதவடிக்கு அருகாமை)

(C-3430)

## தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பொதுக் கூட்டம்

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தைப் புனர மைத்து மீளமைக்கும் நோக்கில் நடத்தப்படும் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கலாநிதி க.குணராசா தலைமையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர் களாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்தகொள்ளவுள்ளனர். (ச-5)

MIS கணனிக்கல்வி நிறுவனம்

Kids Computer Courses

1. Illustrator
2. Photoshop
3. Corel Draw
4. TuxPaint
5. Ms-Office
6. Windows OS
7. InDesign
8. Hardware
9. Internet
10. Audio Editing
11. Video Editing
12. Page Maker

TPNO: 0213216083, 0776577359

Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)

இரயநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்

# 74, Sabapathy Lane, Thalaiyali, Erampady, Jaffna

(3577)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979 இல் பிறந்த 5'5'' புனர்பூசம், மூன்றாம் பாதம், பத்து பாவம் உடைய, மெல்லிய, நற்பண்புடைய மணமகளிற்கு, யாழில் அரசாங்க/ தனியார்/ வர்த்தக தொழில் புரியும், நல்ல குணமுடைய மணமகனை எதிர்பார்க்கிறார்கள். சீதனமாக யாழ். மாநகர எல்லைக்குள் உள்ள 2 1/2 பரப்புக் காணியில் அமைந்த 3 அறைகளுடைய வீடு வழங்கப்படும்.
தொடர்பு: 0773548333

(3715)

## வவு. பதில் வைத்திய நிபுணரை விடுதலை செய்யக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் பதில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றிய வைத்திய நிபுணர் டாக்டர் உமாகாந்த் நேற்று முன்தினமிரவு வவுனியா இறம்பைக்குளத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்தபோது புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவதாக வவுனியா வைத்தியசாலைப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் கைது செய்யப்பட்டதை அரச வைத்திய சங்க வவுனியா கிளையின் பேச்சாளர் ஒருவர் உறுதி செய்தார். அத்துடன் பதில் வைத்திய நிபுணராகக் கடமையாற்றிய இவரை அவரது பதவி நிலைக்கு ஏற்ற வகையில் நடத்த வேண்டும் என்றும் மேற்படிப்புக்காக விரைவில் வெளிநாடு செல்வதற்காக இருக்கும் அவரது தொழில் முன்னேற்றத்திற்கும் பாதகம் ஏற்படாத வகையில் விசாரணைகளை விரைவில் மேற்கொண்டு அவர் மீது குற்றம் இன்றேல் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அரச வைத்திய சங்கம் கோரிக்கை விடுப்பதாகவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

வைத்திய நிபுணர் உமாகாந்த் கைதுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பாகத் தமது தாய்ச் சங்கத்தின் கவனத்திற்கும் தாங்கள் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

# முகாம்களில் சிறுவர்களுக்கான பால்மாக்களுக்குத் தட்டுப்பாடு

## இடம்பெயர் மத்திய நிலையத்திற்கு முறைப்பாடு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் பால்மா உட்பட உணவுப் பொருட்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 2 ஆயிரம் ரூபாவுக்குக் கூட சிறுவர்களுக்கான பால்மாவினைப்பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை அங்கு உருவாகியுள் ளது என்று ஜே.வி.பி எம்.பியும்இடம் பெயர் முகம் மக்களின் நலன் பேணும் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இடம்பெயர் முகாம் மக்களின் நலன் பேணும் மத்திய நிலையத்தின் விஷேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் பத்தரமுல்லையில்அமைந்துள்ளஜே.வி.பியின் தலைமை அலுவலகத் தில்இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளரும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கூறியதாவது , கடந்த கால உள்நாட்டு யுத்தத்தினால்இடம் பெயர்ந்து தற்போது முகாம்களில் வாழும் அப்பாவி பொதுமக்களின் மீள் குடியேற்றம் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் மந்த போக்கை கடைப்பிடித்ததனால் நிலைமை மோசமடைந்து கொண்டே வருகின்றது. எமது மத்திய நிலையத்திற்கு இதுவரையில் 723 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை காணாமல் போதல் தொடர்பாகவும்விரைவான மீள் குடியேற்றம் தொடர்பானதாகவுமே உள்ளன. முகாம்களில் உணவு தட்டுப்பாடு தலைதூக்கி உள்ளதாகவும்முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன.

சிறுவர்களுக்கான பால்மாவுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 2 ஆயிரம் ரூபாவிற்கு கூட பால்மா பைக்கற்றுக்களைப் பெற முடியாத நிலை உருவாகி யுள்ளது. சுமார் 50 குடும்பங்கள் குழுவாக சமைத்து உண்ண வேண்டிய நிலை காணப் படினும் அதற்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களோ சமையல் உபகரணங்களோ இல்லாத நிலை காணப்படுகின்றது.

சமைப்பதற்கு விறகு தேட வேண்டிய தேவை காணப்படினும் அதற்கு அனுமதி கிடையாது. இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளின் ஒன்றே கடந்த சனிக்கிழமை குறிப்பிட்ட முகாம் ஒன்றில் துப்பாக்கி பிரயோகம் வரை சென்றுள்ளது. ஆனால் இந்தச்சம்பவம் தொடர்பாக அரசாங்கம் கூறும்கருத்தோ உண்மைக்கு புறம்பானதாகும். சதோசா போன்ற விற்பனை நிலையங்கள் முகாம்களில் காணப்பட்ட போதிலும் மக்களிடையே போதியளவு பண வசதிஇன்மையால் பயன் பெற முடியாத நிலை உள்ளது.

70 ஆயிரம் பேருக்கு 200 மலசல கூடங்களே காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை நிரம்பி வழிகின்றன. உடைகளுக்கு பாரியளவு தட்டுப்பாடுகள் காணப் படுகின்றது. 20 ஆயிரம் பேர் முகாம்களில் இருந்து ஓடிவிட்டதாகவும் அரசாங்கம் கூறிவருகின்றது. மீள்குடியேற்றம் தொடர்பாகவும்இடம்பெயர் முகாம்களை பராமரிப்பது தொடர்பாகவும் இந்த அரசாங்கத்திற்கு எவ்விதமான அடிப்படை அறிவுமே கிடையாது. அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையால் முகாம் மக்களின்பிரச்சினைகள் கட்டுப்படுத்த முடியாதளவு விஸ்வரூபம் எடுத்து விட்டது. இதனால் சர்வதேச தலையீடுகளும் அதிகரிக்கும் என்றார். (ஓ-6)

# கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யக் கோரி விஜயகாந்த் மனு கையளிப்பு

(புதுடில்லி)

இலங்கைக்கும் ,இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடல்பகுதியில், இருதரப்பு மீனவர்களுமே மீன்பிடிக்க அனுமதிக்கும் வகையில் , புதிய ஒப்பந்தம் உருவாக்க வேண்டும் என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து, உண்ணாவிரத ஆர்ப்பாட்டத் திற்காக டில்லி வந்திருந்த தே.மு.தி.க. திலைவர் விஜயகாந்த் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நேற்று முன்தினம் மனு ஒன்றை அனுப்பினார்.

அதில் கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இலங்கைக்கும் , இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடல்பகுதியில் , இருதரப்பு மீனவர்களுமே மீன்பிடிக்க அனுமதிக்கும் வகையில் புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (6)


## JAFFNA COLLEGE, VADDUKODDAI

ADMISSION 2010

FOR GRADE 1 AND GRADE 6

**மாணவர் அனுமதி -2010, தரம் -1 தரம் 6**

1. *(அ) விண்ணப்பப்படிவங்களை 02.10.2009 முதல் 31.10.2009 வரை பெற்றுக்கொள்ளலாம்.*
   *(ஆ) எக்காரணம் கொண்டும் 31.10.2009 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.*
   *(இ) எமது விண்ணப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்*
   *(ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 31.10.2009 சனிக்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா.*
2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photo copy) இணைக்கப்படல் வேண்டும்.
4. விண்ணப்பப்படிவங்கள் ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500/-
6. *வயதெல்லைகள்:*
   *அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2004 இற்கும் 31.01.2005 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.*
   *ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.*
7. பிரவேச நேர்முகப் பரீட்சை
   *அ) தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சை 21.11.2009 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.*
   *ஆ)தரம் 6 இற்கான தேர்வுப்பரீட்சை 14.11.2009 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.*

மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாணவ மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புக்களுடனும் கூடிய விடுதி நூலகப் பாவனை மற்றும் சிறந்த புலமைப் பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

**அதிபர்** (3387)


# இன்று துன்னாலை வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம்

## கடைக்கண் விழி கொண்டு காத்தருள்வாயப்பா



வல்லிபுரம் தனிலே வாழ்பவனே
வானரம் காத்த வல்லோனே
புவனத்தைக் காத்தருளும் மாயவனே
பொல்லாவினை தீர்க்க வல்லவனே
அவதாரங்களின் அற்புத உருவெடுத்து
பாவக்கொடுமைகள் அழித்த அச்சுதனே
உன்னருளை வேண்டிவந்த பக்தர்களை
கடைக்கண் விழிகொண்டு காத்தருள்வாயப்பா!

திருமதி .செ. பாக்கியநாதன்
நூலகர் வலி/ மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## வல்லிபுரமெனும் தொல்பதி மீதினிலே வாழ்ந்திருக்கும் திருமாலே தேரேறிவருக



அஞ்சனத் திருவண்ணா அரவிந்த மலர்கண்ணா
தேரேறிவருக
அண்டி நின்ற திரௌபதி மானம் காத்த நாராயணா
தேரேறிவருக
அர்ச்சுனர்க்கு தேர்செலுத்தி பகை முடித்த மாதவா
தேரேறிவருக
பண்டு கடலைக்கடைந்து அமுதளித்த பரந்தாமா
தேரேறிவருக
பாடி உருகும்குசேலன் மிடிதீர்த்த ஸ்ரீகிருஷ்ணா
தேரேறி வருக
வண்டமரும் சோலை நிறை வல்லிபுரத்தில் குழந்தையானவனே
தேரேறி வருக
வல்லிபுர மெனும் தொல்பதி மீதினிலே வாழ்ந்திருக்கும் திருமாலே
தேரேறி வருக

தொல்புரத்தூர்-க. லோகேஸ்வரன்

## அச்சம் போக்கும் சக்கரம் கொடுத்தவூர் கேட்பின்



மச்சவதா ரன்மாதவன் குணகடலதில் மீனாக
வந்துமக வாகமாறி யாளாக தோன்றி
அச்சம் போக்கும் சக்கரம் கொடுத்தவூர் கேட்பின்
அலையடிக்கும் கொண்டல்கடற் கரையோர மதிலே
விசைக்காற்று வீசும் கடற் கழிகள் பல தாண்டி
வெளிபல குடி மனைசிலசன் னிதிசதுக்கங் கள் கடந்து
உச்சமாய்வளர்ந் துபனைத்தோப்புகள் மணற்மே டுகள்கிடை
உத்மவல் லிபுரமெனும் திருத்தலமதை காணலாம்.

பா. பாலச்சந்திரன்
மயிலணி.

## பரந்தாமா உனையன்றி இனியாரை வேண்டுவது?



அநியாயம் அவனியிலே அதிகரிக்கும் போதும் நல்
ஆன்மாக்கள் அகதிகளாய் அலைகின்ற போதும்
மனிதாபிமானங் கெட்டழிந்து மேலோர்
மாண்புடனே வாழும்வகை இயலாத போதும் மிகு
கனிபோடு குசேலருக்குக் ககனவாழ்வளித்த தேவா !
பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமா ! உனையன்றி
இனியாரை வேண்டுவதோ? இசையாய் எம் வல்லிபுரத்து
இடங்கொண்ட மாயவனே! துவாரகா புரிநாயகனே!

மட்டுவில் நல்லதம்பி

## அருள் தருக

பாற்கடல் உனக்கு அரண்மனையோ
பாம்பணை உனக்கு அரியனையோ
காத்தற் கடவுளும் நீயல்லவோ
கருத்துள் நிற்பவன் நீயல்லவோ
ஏத்துவர் தேவரும் உனைத்தானே
காத்திட வேண்டும் எமைத்தானே
தேரினில் வருக மாதவனே
காரிருள் நீங்க அருள்தருக

திருமதி . ஜெ.கந்தவேள் ,
கொக்குவில்

## உன்னருளுக்கே

எல்லோர் மனதிலும் நின்று
அருளாட்சி புரிபவன் நீயே!
அல்லாமல் அவரவர் விதிக்காய்
நின்றாடுபவனும் நீயே !
எல்லாமாயிருந்தும் எம் துயர்களை
காண நீ யேன் மறுக்கிறாய்?
வல்லிபுரத்துச் சக்கரத்தான் வாரே
சமர்ப்பணம் உன்னருளுக்கே!

இராம ஜெயபாலன் ,
கொக்குவில்

## தேரேறும் வல்லிபுரா.....

தேரேறும் வல்லிபுரா–நின்
திருக்காட்சி நான் காண வந்தேன்
பார் போற்றும் பரந்தாமா
பக்தர் குறை போக்கிடையா?
சித்தி மிகு தந்து –எம்
சிறுமைகள் யாவும் போக்கிடுவாய்!
எத்திக்கும் உன் பாதம்
சரண் புகுந்தேன்
ஏற்றமுடன் வாழ வழிகாட்டய்யா!

செ.ரவிசாந், குறிஞ்சிக்கவி-
குப் பிளான்

## எம் பாவங்களை போக்கிடுவாய்

தேர் ஏறிவரும்
வல்லிபுர
மாயவனே
உன்னை ஒரு நாள்
தொழுதால்
வந்த வினைகளை
தீத்திடுவாய்
பாவங்களை போக்கிடுவாய்
மகிழ்ச்சிக் கடலில்
எம்மை
குளிக்க வைத்திடுவாய்

சு. ஜெயரூபன் ,பருத்தித்துறை

## மத்திஸ்தர் சபை உறுப்பினர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் தவிசாளராக பாரதிலேன், நாயன்மார்க்கட்டைச் சேர்நத இ.மயில்வாகனம், உதவி தவிசாளராக வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த க.சுந்தரவேல் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன் உறுப்பினர்களாக ச.ஏகாம்பரநாதன் உரும்பிராய், கெ.காண்டீபன், கோப்பாய் சீ.இராம்சாமி, கட்டைப்பிராய் கா.சிவபாலன், நீர்வேலி இ.சிவஞானம், புத்தூர் இ.விக்னேஸ்வரராசா, அச்சுவேலி இ.தெய்வேந்திரம் கோப்பாய், சு.சுப்பிரமணியம் நீர்வேலி, கு.பூபாலசிங்கம் அச்சுவேலி, த.ஞானசேகரவேல், கல்வியங்காடு க.மகேந்திரன் புத்தூர், த.திருநாவுக்கரசு உரும்பிராய், க.நாகரத்தினம் நீர்வேலி, சி.யோகசிங்கம் அச்சுவேலி, க.சிவசுப்பிரமணியம் அச்சுவேலி, நா.சண்முகரத்தினம் புத்தூர், அ.கந்தசாமி அச்சுவேலி, கி.தங்கவடிவேல் கோப்பாய், த.கிருஷ்ணராசா உரும்பிராய், பி.அருட்பிரகாசம் அச்சுவேலி, ப.இராசேந்திரம் ஊரெழு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ-9)

## ஆளுநர் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டக் கிளையின் ஆளுநர் சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் யாழ் மாவட்டக் கிளை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கிளையின் ஆளுநர்சபை உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு அழைக் கப்பட்டுள்ளனர். (6-134)

## திருக்குறள் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை மட்டத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி 4 ஆம் திகதி நடைபெறவிருந்து பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

வலய நிலைத் தெரிவுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலத்தில் நடைபெறுமென் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-9).

# அறவழிப்போராட்ட குழுவின் செயற்பாடுகள் குறித்து அமைச்சருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவினர் சமூக சேவைகள்மற்றும்சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரை யாடியுள்ளனர்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப் பின்போது அறவழிப்போராட்டக் குழுவின் செயலாளர் கே.ஜீவகதாஸ் , தலைவர் சத்திவேல் ஆசிரியர் உட்பட நால்வர் கொண்ட குழுவினர்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து இது வரை காலத்தில் தமது அமைப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் இளைஞர் , யுவதிகளுக்குத் தொழில் பயிற்சிகள் வழங்கி வந்தமை குறித்தும் விளக்கிக் கூறியதுடன் இந்த நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு நிறு வனங்களிடமிருந்து கிடைத்து வந்த நிதி உதவியை தற்போது நிறுத்தப்பட்டுள் ளமையால் வழமையான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் முழு நேரமாக வேலை செய்பவர்களின் ஊதியத்தை வழங்குவதிலும் பெரும்சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் விசேட வலுத்தேவையுடையவர்கள் உளவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரித்து வருவதாகவும் தெரிவித்த அறவழிப் போராட்டக் குழுவினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற நிதிவசதிகளை மேற்கொண்டு தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி அறவெளிப் போராட்டக் குழுவினரின் கோரிக்கைகளை கவனமாகக் கேட்டறிந்த அமைச்சர் ஏற்கனவே நிதிவழங் கிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டும் வேறு நிறுவனங்கள் மூலமாகவும் அறவழிப் போராட்டக் குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தம்மாலான உதவிகளை வழங்கீுவதாக தெரிவித்துள்ளதுடன் இவற்றை முன்னெடுப்பதற்கான திட்ட மதிப்பீடு ஒன்றை தயாரித்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் கேட்டுக் கொண்டார். (6)




## 'கண்மணி' புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது

கண்மணி மாணவர் சுய முன்னேற்ற மாதாந்தப் பத்திரிகையின் புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது.

யாழ் கல்வி வழிகாட்டல் ஆலோசனை நிலைய நிபுணத்துவ ஆலோசகர் பா.தனபாலன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், கவிமணி க.ஆனந்தராஜா, கவிமாமணி கல்வயல் வே.குமாரசாமி ஆகியோர் ஆலோசக குழுவினராக உரும் பிராயைச் சேர்ந்த இரா.ஜெயக்குமாரன்ஆசிரியராகவும் இருந்து இப் பத்திரிகையை நடத்தி வருகின்றார். இதில் மாணவர்களுக்கான குறுக் கெழுத்துப் போட்டி உட்பட பல அம்சங்கள் நிறைந்துள்ளன. (ஓ)

## 'பிரகாசம்' மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அமுத விழாவையொட்டிய பிரகாசம் மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி.ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

வாழ்த்துக்களை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன்,

சங்கானை கோட்டக்கல்வி பணிப்பாளர் துரைஎங்கரசு மற்றும் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை ஆசிரியர் நாகேந்திரம் பாலகிருஷ்ணன் ஆகியோர் வழங்கவுள்ளனர். வெளியீட்டுரையை வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுதந்திரசிவம் மற்றும் ஆய்வுரையை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-9)

## பொதுக்கூட்டம்

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்தி மற்றும் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி அளவில்பாடசாலை அதிபர் செ. இளங்கோ தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி பற்றிய சிறப்புக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதால் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

## முதியோர் தினவிழா

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லம் நடத்தும் முதியோர் தின விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் இல்ல அத்தியட்சகர் என். இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவகோச்சாரியார், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கணக்காளர் செ.செந்தூரன் , சாவகச்சேரி பிரதேசச் செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஓ)

## ELEGY

### Sutharsan..........

What occurred to you?
Why did you hug
Your life's end so early?
You completely forgot promising me.......?

As an English literature student,
You, before me, set an example
To all the other students.
I too decided to follow your example.

What have you done to all of us?
Why did you hug
Your life's end so early?
You did not think of us........?

Now words fail me!
Tears roll down my face!
You are living before me!
Should I say?

"May your soul rest in peace!"

*Fondly remembered by*
*Mr.S. Maheswaran*
*Teacher of English Literature.*
*Jaffna Hindu College.*

(3716)





புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்தின் வைர விழாவும் நூல்வெளியீடும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் நிற்பதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் ம.நடராஜசுந்தரம் நூலை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் -மருதங்கேணி நிருபர்)

## மின்தடைபற்றிய அறிவித்தல்

அவசர திருத்தவேலைகள் காரணமாக ஊர்காவற்றுறை , வேலணை , அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மின் தடைப்படும் என சுன்னாகம் மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-9)

## மரவளர்ப்பு குறித்து ஆராய்வு

யாழ். உடுவில் பகுதியில் நவீன முறையிலான விவசாயச் செய்கைகளையும் நிழல் மர வளர்ப்பையும் மேற்கொண்டு வரும் எஸ். கே லிங்கத்தின் தோட்டத்திற்கு நேரில்சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேக்கு மர வளர்ப்பு குறித்து கலந்துரையாடினார்.

அத்துடன் அங்கு நாட்டப்பட்டுள்ள தேக்கு மரங்களின் வளர்ச்சி குறித்தும் அதன் காலப்பகுதி குறித்தும் விரிவாகக் கேட்டறிந்ததுடன் யாழ். குடாநாட்டில் தேக்கு மர வளர்ப்பினால் ஏற்படும் பயன்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். (6)

# இன்று ஒரு தகவல்

## அடுத்தவர் மேல் பழி

எதற்கெடுத்தாலும் அடுத்தவர் மீது பழி போடுவது இருக்கிறது பாருங்கள்... அது மனிதனுக்குக் கைவந்த கலை..

ஒருவன் டிக்கெற் வாங்காமல் ரயிலில் பிரயாணம் செய்கிறான். அவனிடம் எப்படி வந்தாய்? என்று கேட்டால் அவன், திருட்டு ரயிலில் வந்தேன்' என்கிறான்.

பாருங்கள் திருட்டுத்தனம் செய்தது இவன்... அந்த ரயில் திருட்டு ரயிலாம்.

அதே மாதிரித்தான் இன்னொருவன் ரூபாய் நோட்ட அடிக்கிறான். ஆனால் அதற்குப் பெயர் கள்ள நோட்டு.

சட்ட விரோதமாக சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் இவன்... ஆனால் அதற்குப் பெயர் கள்ளச் சாராயம்.

இதுதான் இன்றைய உலகம்.

நடந்த ஒரு தவறைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்.

"ஐயோ! அது நான் இல்லை சேர், அவன் தான்" என்று இன்னொருவனைக் காரணம் சொல்பவர்கள் தான் அதிகம். அலுவலகங்களிலும் அப்படித்தான். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் மனிதர்கள் அதிகமாகி விட்டார்கள். இதைப்பற்றி ஒருகதை உண்டு.

சுவரொன்று பொத்தென்று இடிந்து கீழே விழுந்து விட்டது. "ஏண்டா இந்தச் சுவரை இடித்தாய்?" என்று அதனருகில் நின்றவனைக் கேட்டிருக்கிறார்கள்.

"ஐயோ... என்மீது தவறு இல்லை. சுவர் உறுதியாக இல்லை. அதைக் கட்டிய கொத்தனார் தான் சுவர் இடிந்து விழக் காரணம்" என்று கூறினான் அவன்.

உடனே கொத்தனாரைத் தேடிச் சென்று அவரிடம் கேட்டார்கள்.

அதற்குக் கொத்தனார், "என்மேல் தப்பில்லை. சீமெந்தையும் மணலையும் கலந்து கலவை போட்டுக் கொடுத்தவர் தான் சுவர் இடிந்து விழுந்ததற்குக் காரணம். அவர் தான் கவனக்குறைவாக கலவையில் அதிகமாகத் தண்ணீரை ஊற்றிவிட்டார்" என்றார்.

உடனே கலவை போட்டவரைத் தேடிப்போய் அவரிடம் விசாரித்தனர்.

அதற்கு அவர், "அந்த மண்பானையின் வாய் அகலமாக இருந்தது... அதனால் அதை இலேசாகக் கொஞ்சம் சாய்ந்ததும் தண்ணீர் அதிகமாகக் கொட்டி விட்டது. அதனால் அந்தப் பானையைச் செய்தவர் தான் சுவர் இடிந்து விழக் காரணம்" என்று கூறினார் அவர்.

உடனே பானை செய்தவரைத் தேடிப் போய் விசாரித்தனர். அவரோ, "என்மீது தவறில்லை. நான் அந்தப் பானையைச் செய்து கொண்டிருந்தபோது அந்தவழியாக ஒரு நாட்டியக்காரி சென்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தபடியே இந்தப் பானையைச் செய்ததால் அது இப்படியாகி விட்டது. அந்த நேரத்தில் இந்த வழியாகப் போகாமல் இருந்திருந்தால் பானையின் வாய் இப்படி அகலமாகப் போயிருக்காது" என்றார்.

உடனே அந்த நாட்டியக் காரியை விசாரித்தனர். அதற்கு அவள், "சலவைத் தொழிலாளி ஒருவரிடம் ஆடைகளை வெளுப்பதற்காகப் போட்டிருந்தேன். அவர் சொன்ன நேரத்தில் அதைக் கொடுக்கவில்லை. அதனால் அவரைத் தேடிப் போனேன். உரிய நேரத்தில் என் துணிகளை கொண்டு வந்து கொடுத்திருந்தால், நான் அந்த வழியால் போக நேர்ந்திருக்காது" என்றார்.

உடனே சலவைத் தொழிலாளியிடம் சென்றார்கள்.

அதற்கு அவன், "ஐயா... நான் வழக்கமாக ஆற்றில் துணி துவைக்கும் கல்லின் மீது சந்நியாசி ஒருவர் அமர்ந்திருந்தார்.

அவர் தியானத்திலிருந்தபடியால் அதைக் கலைப்பதற்கு என் மனம் இடம்தரவில்லை. அதனால் பேசாமல் இருந்து விட்டேன்" என்றான்.

உடனே எல்லோரும் சந்நியாசியைத் தேடிப் போனார்கள். அப்பொழுது அவர் தியானத்தில் இருந்தார். அவரிடம், "சாமியாரே... அந்தச் சுவர் இடிந்து விழ நீங்கள் தானே காரணம்" என்று கேட்டார்கள்.

அவர் மௌனமாக இருந்தார்.

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. ஆதலால். இவர் தான் குற்றவாளி" என்று கூறி அந்த சந்நியாசியின் தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தார்கள். அவ்வளவு தான்! அவர் பொத்தென்று சுவர் போலவே சாய்ந்து விட்டார்.

பாருங்கள்... மௌனமாக இருப்பது கூட சிலசமயத்தில் ஆபத்தில் முடிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம் கொழும்பில் மீண்டும் திறக்கப்படுகின்றது

(கொழும்பு)

இலங்கையில் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி மூடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அங்கமாக இருந்த ஜே.வி.பியின் விமல் வீரவன்ச உட்பட்டோர் அரசாங்கத்திற்கு கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே இந்த அலுவலகம் மூடப்பட்டது.

எனினும், விமல் வீரவன்ச தற்போது இந்த முனைப்புக்கு எவ்வித ஆட்சேபணையையும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில் சர்வதேசநாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதியாக அமெரிக்கரான கொசி மாத்தாய் கடமையாற்றவுள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குஇரண்டாம் கட்ட கடனுதவியாக 320 மில்லியன் அமெரிக்க டொலர்களை அடுத்தவாரம் வழங்கவுள்ளது.

இது இலங்கைக்கு கிடைக்கும் 2.6 மில் லியன் கடனுதவியில் ஒரு பகுதியாகும். இந்த நில்லயில் சர்வதேச நாணய நிதியத்தின் முழு கடன் தொகையும் 19 மாதங்களுக்குள் வழங்கி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இந்த கடன்களை எதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசிய கட்சி கோரியுள்ளது.

குறித்த கடன்கள் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமல் ஏற்கனவே அரசாங்கம் பெற்ற கடன்களை திருப்பிக் கொடுப்பதற்காகவே பயன்படுத்தப்படுவதாக அந்தக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

(ஓ-6)

# வணக்கஸ்தலங்களுக்கு குறைந்த விலையில் சீமெந்து வழங்க நடவடிக்கை

அமைச்சர் பந்துல தகவல்

(கொழும்பு)

மத வழிபாட்டுத் தலங்களில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளுக்கு குறைந்த விலையில் சீமெந்தை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக மற்றும் நுகவர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மதத்தலங்களுக்கு குறைந்த விலையில் சீமெந்தை வழங்கும் திட்டம் அரசாங்க கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வணக்கஸ் தலங்களுக்குத் தேவையான 50 கிலோ கிராம் சீமெந்துப் பொதி ஒன்றை சந்தை விலையினை விட 120 ரூபா குறைவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குறைந்தது 50 பொதிகளைக் கொள்வனவு செய்தாலே இச் சலுகை வழங்கப்படும் எனவும் இந்தச் சலுகையைப் பெற விரும்பும் வணக்கஸ்தலங்களின் நிர்வாகி கள் தமது விண்ணப்பங்களை கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(ஓ-6)



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்களாக கலந்துகொண்ட மக்கள் வங்கி முகாமையாளர் பொ. தங்கராசா, உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் நிலைய தலைவர் ச. ஏகாம்பரநாதன் J.P. ஆகியோரை நிலையச் செயலாளர் த. மகேந்திரம் வரவேற்று விளையாட்டு மைதானத்துக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்


*02.10.2009*
*(புரட்டாதி 16 வெள்ளிக்கிழமை)*
*திரயோதசி முற்பகல் 10.28 மணிவரை*
*சதயம் முற்பகல் 9.05 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*நடேசர் அபிஷேகம்*
*வல்லிபுர ஆழ்வார் தேர்*
*கத்தோலிக்க ஆசிரியர் தினம்*

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், தொழில் நன்மை, உறவினர் வருகை, தனலாபம். |
| இடபம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, தெய்வசிந்தை, போசனசுகம். |
| மிதுனம் | உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை, ஆன்றோர் சந்திப்பு. |
| கடகம் | வீண் தொல்லை, காரிய தாமதம், உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| சிங்கம் | பிரயாண நன்மை, தெய்வ சிந்தை, காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | தொழில் முன்னேற்றம், தேக நலன், சத்துரு ஜெயம், சுவாரஸ்யம். |
| துலாம் | சொத்துப் பிணக்கு, பணக் குறைவு, வேலைச்சுமை, பூர்வ புண்ணிய கருமம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக் குறைவு, சுப செலவு, தொழில் நன்மை, நல்ல செய்தி. |
| தனுசு | இனிய அனுபவம், கூட்டுமுயற்சி, பணவருவாய், வாக்கு மேன்மை. |
| மகரம் | மாதர் நட்பு, தொழில் சிந்தை, தெய்வதரிசனம், முயற்சி தாமதம். |
| கும்பம் | தெய்வ தரிசனம், உறவினர் சந்திப்பு, போசன சுகம், நல்ல முயற்சி. |
| மீனம் | பிதா சிந்தை, உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம், தன விரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 40 |
| தக்காளி | 20 | 30 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 70 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 50 |
| பாகற்காய் | 70 | 90 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 35 |
| பயிற்றங்காய் | 60 | 60 | 45 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 60 | 80 | 50 |
| முருங்கைக்காய் | 160 | 190 | 150 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 280 | 300 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 45 |



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வா

# தேர்த் திருவிழா சிறப்பு

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி





குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வட திசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல் நிறக் கடவுளெந்தையரவணைத் துயிலுமா கண்டு
உடலெனக் குருகுமாலோ என் செய்கேனுலகத் தீரே

தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தானை பாடிய பாட்டிலே இலங்கையும் இடம்பெற்றமையை யுலகறிய வேண்டும். வல்லிபுரத்தில் சக்கரம் மூலஸ் தானத்தில் இருந்து அருளாட்சி புரிந்து வருகின்றமையால் சக்கரத்தாழ்வார் என்ற சிறப்புப் பெயருடன் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஆலயமாக விளங்குகின்றது. சக்கரத்தாழ்வார் ரதபவனி காண்போம். உள்ளுணர் வைப் பெறுவோம். உள்ளுவகை பொங்க அவனருளாலே அனைவருக்கும் மூலமல முனைப்பு வலி கெட வேண்டுதல் செய்து பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றேன்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்**






## அறங்காவலர் சபைத்தலைவரின் ஆசிச் செய்தி

வல்லிபுர ஆழ்வார் சுவாமிகளின் வருடாந்த உற்சவத்தின் சிறப்பம்சமான தேர்த்திருவிழாவை முன்னிட்டு வலம்புரி பத்திரிகையினர் ஒரு விசேட மலர் வெளியிடுவதையிட்டு மன நிறைவு அடை கின்றோம்.

எல்லாம் வல்ல வல்லிபுர ஆழ்வார் சுவாமிகளின் அருள் பாரெங்கும் பரவி சிறக்கவும் பக்தர்களின் குறைகள் தீரும் அற்புதமான நந்தகோபாலனின் அருள் வெள்ளம் எங்கும் பரவட்டும்.

இந்தத் தேர்த்திருவிழாவினைக் கண்டுகளிக்க இயலாதவர்களுக்கு இம்மலரின் மூலம் சகல செய்திகளும் கிடைக்கும் என வாழ்த்துகின்றேன்.

**இ.அன்னலிங்கம், அறங்காவலர் சபைத் தலைவர்**

## வல்லிபுரம் ஆளும் மாயவரே! தேரேறி அருள்வாய்

பாண்டவர்க்கு தூதுசென்ற பாண் டுரங்கா தேரேறி வருக

பாஞ்சாலி துயர்தீர்த்த பரந்தாமனே தேரேறி வருக

நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்ற தேரேறி வருக

நினைத்ததை நிறைவேற்றும் ஆழ் வாரே தேரேறி வருக

வேண்டிடும் தீர்வதனைத்தர மாய வனே தேரேறி வருக

வெற்றிகள் தந்தெமையாள சக்கர த்தாழ்வாரே தேரேறி வருக

ஆண்டு கொள்வாய் எம்மை அரங் கனே தேரேறி அருள்வாய்

அன்பனே! வல்லிபுரம் உறைபவனே காத்தருள் வாய்

**செல்வி. கலாநிதி அருளானந்தன்**

## பாதுகாத்து அருளுவான்




ஈழ வள நாட்டின் வடபாலுற்ற யாழ். மாவட்டத்திலே நல்லருளும் வல்லிபுரத்திலே அமைந்த " வல்லிபுர ஆழ்வார் ஆலயம் எல்லையில் நிலையில் சொல்லரும் அருளை வழங்கும் திருமா லாலயமாகும்.

இவ்வாலத்திலே புரட்டாதி மாதத் தில் வரும் அமாவாசை முதல் அமையும் பதினேழு நாட்களும் சீருற மிளிரும் திருவிழாக்களிலே பதினைந்தாம் நாள் அமையும் தேர்த்திருவிழா சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும். காக்கும் கருணைத் திருமால் புகழ்த்தேரூர்ந்து வந்து, நீக்கும் நிலையிலுள்ள அம்சங்களைப் போக்கி, ஆக்கும் வகையில் ஆன்மாக்களை ஆக்கிக் காக்கும நிலையாக இதுவுள்ளது. விஞ்சிடும் வஞ்சனை, நெஞ்சுறும் ஆசை, மிஞ்சிடும் கோபம், எஞ்சுறும் கடுமொழி இவற்றை யெல்லாம் துஞ்சிடச் செய்து மாசிலா மனத்தினராய் மண்ணவரை ஆக்கி காக்கும் ஊக்கம் கொண்டு தேரேறி விரைந்துவரும் தினமாக இது திகழக்கின்றது.

அழிவுறு வழிகள் நீக்கி
ஆக்கவே ஆக்கும் போக்கில்
தெளிவுறு திறம தோடு
திருவரி தேரி லூர்ந்து
வழியுறு வகையில் வந்து
வல்லியோர் புரம துற்று
பழியுறு பான்மை மாற்றிப்
பாதுகாத்தருளு வானே!

**புலவர் மு.பாலசுப்பிரமணியம்,**
**அதிபர், யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் ச்ாவகச்சேரி**

## வேண்டுவார் வேண்டுவதைக் கொடுத்தருளும் மாயவனே தேரேறி அருள்செய்ய வேண்டும்



ஈழநாட்டில் உள்ள விஷ்ணு ஆலயங் களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்கே பொன்னாலை வரதராஜப் பெருமாளும், கிழக்கே வல்லிபுர ஆழ்வார்சுவாமியும், யாழ்.நகரில் வண்ணை வேங்கடேசப் பெரு மாளும் இருந்து அருளாட்சி செய்கின்றனர்.

நெய்தல் நிலமும் மருதநிலமும் கலந்த இடத்தில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்து காட்சி தருகின்றது. காத்தற் கடவு ளாம் விஷ்ணுவுக்கு இலங்கையில் அமைக் கப்பட்டுள்ள ஆலயங்களுள் சிறப்பு வாய்ந் ததும் முதன்மை வாய்ந்ததுமாக இவ்வா லயம் விளங்குகின்றது. இவ் உலகில் எங்கும் இல்லாதவாறு இவ்வாலயத்திற்கு சக்கராயுதம் மூலமூர்த்தியாக எழுந்தருளி இருப்பது தனித்துவமானது. ஆண்டவன் அநாகரட்சகன் என்கின்ற மகா விஷ்ணுவின் வடிவமாகவே இவ்வாலய வழிபாடுகள் அனைத்தும் நடைபெறுகின்றன.

வேண்டுவார் வேண்டுவதை கொடுத்தருளும் மாயவன் இன்று தேரேறி அருள்பாலிக்கும் திருக்கோலம் அருள்மயமானது. எல்லோ ரையும் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டவேண்டுமென ஆழ்வாரின் திருப்பாதக் கமலங்களை பணிந்து இறைஞ்சுவோமாக.

**தி.ரவீந்திரநாதன் (ஆசிரியர்)**
**யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.**

### மலராக்கம்

இணை ஆசிரியர்கள்:

சைவப்புலவர்
*குமாரசாமி சுமுகலிங்கம் J.P*
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி, சாவகச்சேரி

*மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்*
யா/ஸ்ரான்லிக் கல்லூரி

*தில்லைநாதன் ரவீந்திரநாதன்*
தலைவர், நல்லுறவு மன்றம், யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி


வல்லிபுர நாதர் பாதம் பணிவோம்
திருமணப் பட்டுப் புடவைகள் மற்றும் நவீனத்துவமான புத்தம் புதிய ஆடை வகைகளையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யவாருங்கள் நெல்லிய--டியில்

சோபி புடவையகம்

இல:2 சந்தை உட்புறம்
நெல்லியடி


## தேரேறும் பெருமானின் அருளாசி அனைவருக்கு


சக்ரத்தாழ்வார் திருத்தாள் பணிவோம்

அனைத்துவகையான தரமான படப்பிடிப்புகளுக்கும்

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

இல :-119, பருத்தித்துறை வீதி,
நல்லூர் -துன்னாலை, யாழ்ப்பாணம் T.P- 021 222 6596

"பசுக்கொலையினை நிறுத்திட எழுவோம்
பாரெங்கும் பசுக்களைப் காப்போம்"

"பசு காத்தவருக்குப் பரகதி கிடைக்கும்
பசுவை ஒறுத்தவர் பாழ்.நரகடைவர்"

"பசுவினை உண்போர் பாழ்பட்ட பாவிகள்
பசுவினைக் காப்போர் பார்புகழ் தேவர்கள்"



வேணி களஞ்சியம்

இல :-165, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் T.P- 021 222 2661
021 222 2046



உள்நாட்டு வெளிநாட்டிற்கான
துரித தபால்கள், பொதிகள் சேவை!

FedEx Express

(யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவரி)

இப்பொழுது வடமராட்சியில்

திருமுருகன் கொம்நெற் (TCN Express)

பிரதான வீதி, நெல்லியடி

(ஹற்றன் நஷனல் வங்கி அருகாமையில்)

021 222 7835

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### விஜயநகர நாயக்கர் கால கலைப்படைப்புக்கள்

15

மேலும் அவர்களது கால , குறிப்பாக நாயக்கர் கால, ஓவியக் கருப்பொருள் பெரும்பாலும் ஏதேனும் ஒருகதையைக் காட்டுவதாக இன்றி காப்பியத்தின் அல்லது புராணத்தின் முழுக்கதையையும் காட்டுவதாக அமைந்துள்ளமையைக் காணலாம்.


இதற்குக் காரணம், முன்னமே கூறியுள்ளபடி தமிழகத்தின் முந்தைய கலைக்கூறுகளோட்டு சாளுக்கிய மரபும் கன்னட, தெலுங்கு மரபுகளும் இணைந்தமையேயாகும்.

விஜயநகரப் பேரரசர்களின் தொன்மையான ஓவியங்களை அவர்களது தலைநகரான ஹம்பியில் காணமுடிகின்றது. ஹம்பி விருபாக்சர் கோயிலின் பெரிமுக மண்டபத்தின் கூரையில் விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்குக் காரணமாயிருந்த வித்யாரண்யரின் உருவமும், பரிவாரங்கள் புடைசூழ அவர் பல்லக்கில் பவனிவரும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கு உருவங்கள் அனைத்தும் பக்கவாட்டில் திரும்பியிருப்பது போல் காட்டப்பட்டுள்ளன. இது போன்ற லெபாக்ஷி என்ற இடத்திலும் வீரபத்திரராலயத்தில் மணடபத்தின் விமானத்தின் (கூரை) ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. விஜயநகர ஆட்சிக் காலத்தில் லெபாக்ஷி சிறந்த வாணிகத்தளமாயிருந்தது.

அங்குள்ள தங்களது குலதெய்வமான வீரபத்திரர் ஆலயத்தினை அழகுபடுத்த விஜயநகர மன்னர்களது சிற்றரசர்கள் ஏராளமாகச் செலவு செய்தனர். விதானம் முழுவதும் ஓவியம் தீட்டப்பட்டிருந்த போதும் பெரும்பகுதி அழிந்துபோய் சிறிதளவு எஞ்சியிருக்கின்றது. இங்கு தெரியும் ஓவியங் களாவன, மகாபாரதம், இராமாயணம் மற்றும் புராணங்கள் ஆகும். இவைதவிர இவ்வோவியங்களை செய்வித்த விருப்பண்ணர் மற்றும் வீரண்ணர் ஆகியோரின் உருவங்களும் உள் ளன.

இதிகாச புராணக் கதைகளில் குறிப்பிடத்தக்கவை. இராமர் பட்டாபிஷேகம், கிரதார்ஜுனியம், வடபத்ரசாயி, கிருஷ்ணர், பிட்சாடனர், காலாரி, கங்காதரர், திரிபுரத்தாகர் போன்றனவாகும். கங்காதரர், ஓவியத் தொகுதி மிக அருமையாக அமைக்கப் பட்டுள்ளது. சிவ பெருமான் உயர மான மகுடம் தரித்து மூக்குத்தி மற்றும் பல ஆபரணங்கள் அணிந்துள்ளார். அவரது தலைமீது இறங்கிய கங்கை

ஸ்ரீரங்கம்-சிற்பம்



பூமி நோக்கிச் செல்வதைக் குறிக்க அவரது தலையலிருந்து தரைவரை மீன்கள் காட்டப்பட்டுள்ளதைக் காணலாம். பார்வதி கோபத்துடன் திரும்பியிருப்பதும் சிவபிரான் அவரது தாடையைப் பிடித்துக் கெஞ்சுவதும், இவர்களுக்கருகே பணிப் பெண் நின்றுகொண்டு லோக மாதாவுக்கு ஆறுதலளிப்பதும் காணக்கிடைக்காதனவாகும். இதனி னும் அழகானது சிவனும், பார்வதியும் இடபவாகனத்தில் அமர்ந்து மனுநீதி கண்டசோழனை வாழ்த்துவதாகும். கோவில்களில் உள்ள ஓவிய அமைப் பே தொடர்ந்து பல விஜயநகர -நாயக்கர் கோவில்கள் பின்பற்றப்பட்டிருப்பதால் அவை பொதுவாக லெபாக்ஷி பாணி ஓவியங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

இவை கர்நாடகத்தில் அணிகொண்டே சோமபாளையம் முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. அணிகொண்டேயின் ஓவியங்கள் சோழ நாட்டு ஓவியக் கலைஞர்களின் திறனை நினைவூட்டுகின்றன என முல்க்ராஜ் ஆனந்த் கூறுகின்றார். இந்த லெபாக்ஷி அல்லது விஜயநரக -நாயக்கர் ஓவியப் பாணி கீழ்க்கண்ட முக்கிய கூறுகளைக் கொண்டவையாகும்.


இவ்வோவியங்களில் உருவங்கள் பக்கவாட்டில் பார்த்த வண்ணம் (Profile) அமைக்கப்பட்டிருக்கும். இவற்றில் உடல் அவயவங்களாவன மூக்கு, கண், முழங்கை, கால்இவை கூர்மையாக அமைக்கப்பட்டிருக்கும். உடலில் அதிக ஆபரணங்கள் இடப்பட்டிருக்கும். உடல் சதைப்பற்று மிக்கதாய் அமைக்கப்பட்டிருக்கும்.

பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

சிவப்பு வண்ணம் அதிகமாகக் காட்டப்படும். ஆடைகளில், குறிப்பாக பெண்களின் சேலைகளில் அதிக பூவேலைப்பாடுகள் இருக்கும். ஓவியத்தின் விளிம்புகளில் வண்ணங்களும் பூவேலைப்பாடும் இருக்கும் (Border) . நதிகளை அல்லது கடலைக் காட்ட மீன் போன்றவற்றை நீரில் விளையாடுவதைப் போல் காண்பிப்பர். பெண்களுக்குப் பெரிய கொண்டை அணிவிக்கப்பட்டிருக்கும். ஓவியத் தொகுதிகளில் ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு குறிப்பு தெலுங்கிலோ அல்லது அப்போது வழக்கிலிருந்த தமிழிலோ எழுதப்பட்டிருக்கும். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



138

உதாரணமாக பாரிய சந்தையொன்றில் (Super -Market) தள்ளாடும் வயோதிப மாது ஒருவர் தள்ளுவண்டியில் (Trolley) பொருட்களைத்தேர்ந்தெடுத்து கொண்டு வண்டியை தள்ளமுடியாது.

தள்ளிவிடுவதைக் கண்ட உதவும் கரம் நீட்டும் நல்லவர் ஒருவர் (Good Samaritan) உதவி செய்ய முயன்றார். இதை சந்தேகித்த அவள் அங்கு நின்ற காவலாளிக்கு முறையீடு செய்து அவரை வம்பில் மாட்டிவிட்டாள். ஆகவேதான் அமெரிக்கர்கள் தனிமனித சுதந்திரத்தைச் சிக்கனப்பிடித்து சாகும் வரை காப்பாற்றுகிறார்கள்.

இரண்டாவது கட்டமாக விடுதலையென்பது உடன்பாட்டு மட்டத்திலும் அறியப்படுகிறது.

In Positive Sense சந்தர்ப்பங்கள் எதுவாயினும் இறுகப்பற்ற வேண்டியவை என்ற கருத்து அமெரிக்கர்களிடம் இருக்கும் கொள்கை. அதாவது சந்தர்ப்பங்களைப் பற்றும் போது சில விழுமியங்களை அவர்கள் பின்பற்றுகிறார்கள். தன்னம்பிக்கை, தன் முன்னேற்றம், ஆபத்துக்களை வலிந்து மேற்கொள்ளல், உத்வேகம், ஒழுங்கும் கட்டுப்பாடும், கடும் உழைப்பு, எதிலும் மிதவாதம், சிக்கனம், பொறுப்பேற்றல் ஆகியன.

இவையனைத்தும் வாழ்வில் நல்லதே நடக்கும் (Optimism) என்ற நம்பிக்கையிலும் தனிமனித விடுதலையிலும் கட்டியெழுப்பப்பட்டனவாகும்.

அதாவது துணிவு, வியர்வை சிந்த உழைத்தல், நவநாகரிகமான நடத்தை ஆகியவற்றின் மூலம் ஒவ்வொருவரும் தான் பிறந்து வளர்ந்த சூழலைத் தாண்டி மேலெழ முடியும் என்ற நம்பிக்கையில் வேரூன்றி நிற்கின்றன.

இந்த விழுமியங்கள் தனிமனிதன், சமூகம் , நாடு என்று பரிண மித்துப் பரந்துபட்டு அரசியல், பொருளாதாரம் என்று எல்லாச் செயல்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றன.

அமெரிக்கர்களின் தனித்துவம் என்பது சில சமூக விழுமியங்களால் கட்டுக்குட்பட்டு நல்ல சமூக அமைப்புக்கு அடித்தளமாகின்றது. குடும்பம் கட்டாய தேவைகளில் முக்கியத்துவம் வகிக்கின்றது. இது பாரம்பரிய கடப்பாடுகளை எடுத்தியம்புகின்றது. அயலவர்களைப் பேணல், மூலம் சமூக ஒருமைப்பாடு என்ற விழுமியத்தை அடைதல் ஊக்குவிக்கப்படுகிறது. நாடு என்ற நிலையில் நாட்டுப்பற்றுள்ள நல்ல குடியானவனாகத் தன் கடமைகளை, கடவுள் நம்பிக்கை அல்லது தர்ம வழியில் நின்று செய்து முடிக்க அமெரிக்கர்கள் வழிநடாத்தப்படுகிறார்கள்.

பல நாடுகளில் தனி மனிதத்துவமும் நெருக்கடி நிலையில் தான் இருக்கின்றது. ஆனால் அமெரிக்கர்கள் நெருக்கடிகளைச் சமாளித்து வாழப்பழகி விட்டனர்.

ஐரோப்பாவில் நிலப் பிரபுத்துவத்தின் கீழ் மக்கள் அடைந்த துன்பங்களை அவர்கள் புரட்சிகள் மூலம் தூக்கியெறிந்ததைப் போன்ற காட்சிகள் அமெரிக்காவில் நிகழவில்லை. அமெரிக்கா பெரிய நிலப்ப்ரப்பையும் நிறைந்த மூல வளங்களையும் கொண்டிருந்தபடியால் குடிவரவு மூலம் மக்கள் தங்களை புதுப்பித்துக்கொள்ள வாய்ப்புக்கள் நிறைய இருந்தன. ஆகவே அங்கே விவசாய சமூகம் இலகுவாகத் தொழில்துறை சமூகமாக மாற முடிந்தது.

சிலவேளைகளில் விழுமியங்கள் ஒன்றுடன் ஒன்று மோத வாய்ப்புகளுண்டு. இதற்குக் காரணம் அவையொவ்வொன்றும் மனிதர்களின் கையிலகப்பட்டு உருமாறவும் அதீதமாகச் செயல்படவும் செய்கின்றன. தன்னம்பிக்கை தன்னலமாக மாறலாம் தனி மனித சுதந்திரம் ஒழுக்கக் கேட்டுக்கு வழிவகுக்கலாம்.


## ஐம்பொன்

இல்ட்சியம் பேராசையாகவும எந்த விலை கொடுத்தாவது இலக்கை அடையும் துடிப்பாகவும் மாறலாம். அமெரிக்கர்களின் வரலாற்றில் பல தடவைகளில் நாட்டுப்பற்று ஏனைய நாடுகளுடன் போருக்குப் போனதையும் வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறிய மக்களை வெறுத்தொதுக்கியதையும் பார்த்தும் படித்தும் உள்ளோம். (தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கடல் வாழ் உயிரினங்களில் கடலட்டைகள்

கடல் வாழ் உயிரினங்களில் அதிக பொருளாதார முக்கியத்துவம் உடைய விலங்கினங்களில் கடலட்டைகளும் (Seacucumbers) ஒன்றாகும். இவை விலங்கு இராச்சியத்தில் (Kingdom: Animalia) கணம் முட்தோலிகளில் (Phylum: Echinodermata) வகுப்பு Class: Holothuroidea சேர்ந்தவையாகும்.




இவற்றின் நீண்ட உருளை வடிவமான உடலானது வாய் மற்றும் குதத்தினை எதிர் முனைகளில் கொண்டிருப்பதுடன் சுவாச மரங்கள் எனும் உணவுக்கால்வாயுடன் தொடர்புபட்ட அமைப்பினை சுவாச அங்கங்களாகக் கொண்டுள்ளன. இவற்றில் சில சுண்ணாம்பு/ கல்சியம் காபனேற்று சேர்க்கையிலான முட்கள் போன்ற வெளிநீட்டங்களை தோலில் கொண்டுள்ளன.

அத்துடன் பல்வேறு வண்ணங்களில் அதாவது வெள்ளை, கறுப்பு, சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், மண்ணிறம் மற்றும் ஊதா நிறங்களிலும் அல்லது பல நிறங்களின் சேர்க்கையினாலும் காணப்படுகின்றன. இவ்வாறான கவர்ச்சிகரமான உடலமைப்பும் அடிதளத்தில் இடம் பெயரும் பாங்கும் உலகின் பல்வேறு கடல் நீர் (மீன்) வளர்ப்பு (aquarium) இடங்களில் விரம்பப்படுவதற்கான காரணங்களாய் அமைகின்றன. இவை சில மில்லி மீற்றர் தொடக்கம் 2 மீற்றர் வரை நீளத்தில் வேறுபடுகின்றன.

இவை பெரும்பாலும் ஆழம் குறைந்த கடற்பகுதியிலிருந்து ஆழமான பகுதி வரை முருகைக் கற்பாறைத் தொடர்களுக்கிடையிலும் பாறை / சேற்று மணற்பாங்கான இடங்களிலும் காணப்படுகின்ற அடித்தள உயிரிகளாகும். இவை ம்முழுமையாக கடல் வாழ்கைக்குரியன.

இவற்றின் பல்வகைமையை நோக்கும் போது ஏறத்தாள 10 குடும்பங்களை சேர்ந்த 1400 இனங்கள் வரை தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் அண்ணளவாக 21 இனங்கள் எமது பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. உதாரணமாக *Holothuria scabra*, *H. nobilis*, *H. impatiens*, *H. fuscogilva* என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

அத்துடன் இந்திய பசுபிக் கடற் பிராந்தியமே இவற்றின் பிரதான வாழிடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் ஏறத்தாள 90/ ஆன கடலட்டைகள் இப்பிராத்தியத்திலே பிடிக்கப்படுவதுடன் பதப்படுத்தப்பட்டு பயன் படுத்தப்படுகின்றன. கொங்கொங் சிங்கப்பூர் மற்றும் தாய்வான் சீனா என்பன பிரதான சந்தைப்படுத்தும் இடங்களாயுள்ளன. உலகில் ஏறத்தாள 30 நாடுகள் கடலட்டைகள் வர்த்தகத்தில் ஈடுபட்டாலும்அண்ணளவாக அரைவாசி நாடுகளே பயன்படுத்துகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவும் இலங்கையும் பிரதான உற்பத்தியாளர்களாகும். இலங்கையை பொறுத்தளவில் பிடிக்கப்படும் கடலட்டைகள் யாவும்ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எமது வட பிரதேச கடல் வளங்களில் கடலட்டைகள் பிரதான பங்கை வகிக்கின்றன எண்பதுகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஏறத்தாள 20 இனங்கள் வரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் ஒரு சில இனங்களே பொருளாதார முக்கியத்துவம் உடையதாக உள்ளன.

### பிரதான இனங்களாவன

இவற்றில் *Holothuria scabra* (Sand Fish)பிரதானதாகும். இவ்வினம் அதிகளவில் கிடைப்பதுடன் உயந்த சந்தைப் பெறுமதியுடையதாகும். கறுப்பு/சாம்பல் நிறத்தில் வெண்ணிறக் குறுக்கு கோடுகளை மேற்புறத்திலும் வெண்ணிறத்தில் கறுப்பு புள்ளிகளை கீழ்ப் புறத்திலும் கொண்டிருக்கும்.

ஏறத்தாள 400 மில்லி மீற்றர் வரை நீளமாக வளரக் கூடியதுடன் 1.5 கி.கிராம் வரை நிறையை பெறக் கூடியது. ஆழ்கடலுக்குரியவை. *Holothuria scabra var versicolor* ஆனது சீரான கறுப்பு நிறமுடையது இவை இந்தியா , அந்தமான் நிக்கோபாரை சூழ்ந்த கடற்பகுதியிலும் மன்னார் வளைகுடாவிலும் பாக்கு நீரிணைப் பகுதியிலும் அதிகளவு கிடைக்கின்றன.

*Holothuria fuscogilva* (White teat fish) ஏறத்தாள 400 மி.மீற்றர் நீளமாகவும் 2-3கி.கிராம் நிறையுடையதாகவும் வளரக்கூடியது. பெரும்பாலும் முருகைக்கற்பாறைத் தொடர்களுக்கு இடையில் காணப்படும். இந்தியாவைச் சூழவும் மன்னார் வளைகுடாவிலும் அதிகளவு காணப்படும். இவ்வினமும் அதிக சந்தை ப் பெறுமதி உடையது .

*Holothuria nobilis* (Black teat fish) பழுப்பு நிறத்தில் கறுப்பு நிற அடையாளம் காணப்படும் ஆழம் குறைந்த கடநீரேரிப் பகுதியில் காணப்படும் இவ்வினம் அதிக சந்தைப் பெறுமதி உடையது.

*Holothuria spinier* (Brown Sand fish ), *Actinopyga miliaris* (Black fish), *Thelenota ananas* (Prickly red fish), *Holothuria impatiens* போன்றவை ஏனைய இனங்களில் சிலவாகும்.

எமது பிரதேசத்தில் பொதுவாக கறுப்பு மற்றும் வெள்ளை நிற கடலட்டைகள் கிடைப்பதுடன் *Holothuria scabra* வே அதிக பொருளாதார முக்கியத்துவமுடையதாக உள்ளது. பொதுவாக கல்விச் சுற்றுலாக்களின் போது சாதாரணமாக பருத்தித்துறை கடற்பகுதியில் முருகைக் கற்பாறைத் தொடர்களுக்குகிடையில் அவதானித்து இருக்க முடியும். எனினும் குடாக்கடலிலேயே அதிகளவு காணப்படுகின்றது.

அத்துடன் தற்போது மீன்பிடித்டைகள் அகற்றப்பட்ட பின்னர் குடாக்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகள் சிக்குவதை பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. எனவே கடலட்டைகளின் பொருளாதார முக்கியத்துவம் பற்றி அறியும் ஆவல் பலருக்கும் ஏற்படுவது இயல்பாகும்.

பண்டையகாலம் தொட்டு தென் கிழக்கு ஆசிய மக்களால் குறிப்பாக சீனர்களால் கடலட்டைகள் உணவாகவும் மருந்தாகவும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. உணவின் அடிப்படையில் நோக்கின் பெரும்பாலும் பதப்படுத்தப்பட்டே பயன்படுத்ப்படுகின்றன. அத்துடன் கௌரவத்திற்குரிய உணவு வகையாக பெரும்பாலும் விழாக்காலங்களில் உண்ணப்படுகின்ற பெறுமதி வாய்ந்த உணவு வகையாக உள்ளது.

பதப்படுத்தப்பட்ட கடலட்டைகள் **Beach-de-mer** என அழைக்கப்டுகின்றன. இவை பெருமளவில் சீனர்களாலும் மற்றும் கிழக்கு மொங்கோலியா, ரஷ்யா, கொரியா, ஜப்பான், பர்மா, மலேசியா, சிங்கப்பூர் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தென் பசுப்பிக் தீவுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் பப்புவா- நியூகினியில் உடன் உணவாக பதப்படுத்தப்படாமலேயே பயன்படுத்தப் படுகின்றது.

போசனைப் பெறுமானத்தை நோக்கின் ஏறத்தாள 55% புரதமும் 10-16% மியூக்கோ பொலிசக்ரைட்டும் மிகக் குறைந்தளவில் கொழுப்பும் காணப்படுகின்றது. அத்துடன் Chondriotins, Vitamin A&C, Riboflavin, Niacin, Ca, Fe, Mg, Zn, Na என்பனவையும் அறியப்பட்டுள்ளன.

### மருத்துவக்குணங்களை நோக்கினால்

சீனர்களால் Arthritis நோய் நிவாரணியாக பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றிலுள்ள கசியிழைய உடற் பகுதியிலுள்ள Chondriotin sulphate ஆனது இவ் வியல்பைக் கொண்டுள்ளது.



இவற்றிலுள்ள Saponin ஆனது hypoglycemic, chemopreventive, anti-inflamatory, anti-hepatotoxic, antiviral, anti-fungal மற்றும் mollusciadal activity ஐ காட்டுவதாக அறியப்பட்டுள்ளது.

அத்துடன் புற்று நோய் எதிர்ப்பு விளைவுகளையும் கொண்டுள்ளதாக ஆரம்ப ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இவற்றின் உடற் சுவரிலுள்ள Collagen ஆனது அனீமியா மற்றும் hematog enesis என்பவற்றிற்கு நிவாரணியாக உள்ளது. இவற்றிலுள்ள holothurians glucosaminoglycan (HG) ஆனது நுரையீரல் புற்றுநோய் galactophore புற்று நோய் என்பனவற்றுக்கான மருந்தாகவும் குருதிச் சிறு துட்டுக்கள் திரளலடைவதை தடுக்கும் காரணியாகவும் பயன் படுத்தப்படுத்தப்படுகின்றது.

மேற்கத்தேய மருத்துவத்தில் கடலட்டைகளில் இருந்து பெறப்படும் மருந்துகள் மூலம் Rheumatoid Arthritis, Osteoarthritis, Ankylosing Spondylitis மற்றும்Connective tissue dis arders என்பன வெற்றிகரமாக குணப்படுத்தப்படுகின்றன.

அவுஸ்ரேலியா Arthritis க்கான நிவாரணியாக கடலட்டைகளை அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை உபயோகிப்பதை அனுமதித்துள்ளதுடன் ஜப்பானில் AIDS க்கான நிவாரணியாகவும் பயன் படுத்தப்படுகின்றது. அத்துடன் சிதைந்த இழையங்களை புதுப்பிக்கவும் காயங்களை குணமாக்கவும் மூட்டுக்களை பலப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது.

எனவே மருத்துவரீதியிலும் உணவாகவும் பயன்படுத்தக்கூடிய கடலட்டைகள் எமது பிரதேசத்தில் கிடைக்க கூடியதாக உள்ளமை இயற்கையின் வரப்பிரசாதமாகும். தற்போதைய நிலவரப்படி உணவுக்காக பதப்படுத்தியே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதுவும் மிகவும் பாரம்பரியமான ஆரம்ப பதப்படுத்தலே மேற்கொள்ளப்படுகிறது.

அதாவது புதிதாகப் பிடிக்கப்படும் கடலட்டைகளை கடல் நீரில் அவித்து பின்னர் மண்ணில் ஓர் குழியை ஏற்படுத்தி அதிலிட்டு சாக்கினால் மூடிவைத்த பின்னர் அடுத்தநாள் கடலட்டையின் மேற்புறத்திலுள்ள கறுப்பு சார் சுண்ணாம்பினை அகற்றி கால்களால் மிதித்து பின்னர் சூரிய உலர்த்தல் மேற்கொள்ளப்பட்டு பொதி செய்து அனுப்பப்படுகின்றது.

துளசிதா வில்லியம் சாந்தகுமார்
B.Sc. (Hons), விலங்கியல்

இம்முறையானது உலக சந்தையில் அதிக பெறுமதியை ஈட்டித்தருமளவு திருப்திகரமானதாக இல்லை. எனவே தரமான உற்பத்தியை மேற்கொள்வதற்கு பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம். (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 5

டீ ஒக்சி ரைபோ நியூக்கிளியோ டைட்டுக்களின் (Deoxyribonucleotides) பல் பகுதிய மாக்கலில் உதவும் நொதியம் எது?

விடைகளை 14.10.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி

Mr. V. Senthil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

**புதிர் 3 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கணேசராசா கபிலன்**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**புதிர் 4 இற்கான விடை : Restriction Endonuclease**


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 05


சரியான விடை :.........................................
முழுப்பெயர் :.........................................
முகவரி :.........................................
:.........................................
கையொப்பம் :.........................................

வார் சுவாமி கோவில்

# மலர் -02.10.2009







## பிரதம குருமார்களின் நல்லாசிகள்





*ஸ்ரீமத் பகவத்கீதை ராஜ வித்யா ராஜ குஹ்பய யோகம்*

*25 சுலோக*

*தேவர்களைத் தொழுபவர்கள் தேவர்களையடை கின்றனர். பிதிர்களைப் போற்றுபவர்கள் பிதிர்களைப் பெறுகின்றனர். பூதங்களை வணங்குபவர்கள் பூதங்களைப் போய்ச் சேர்கின்றனர் என்னைப் பூசிக்கின்றவர்கள் என்னையே எய்துவார்கள் .*

*சுலோக 25*

நாராயணன் மெய்யடியார்களே! அவனருளாலே அவன் தாழ்வணங்கி சரித்திரப்பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுரக் கோவில் விரோதி வருஷ மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை புரட்டாதி மாதம் 2ஆம்திகதி(18.09.2009) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (02-10-2009) மஹோற்சவத்தின் பிரதான அங்கமாகிய இரதோற்சவம் ஆகும். காத்தற் கடவுள் ஆன சக்கரமாயவன் ஆன்மாக்களின் ஆணவமலத்தை அழிப்பதற்காக தேரேறிவருகிறார். ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் தொழில் புரிந்து ஆன்மாக்களைப் புனிதமாக்கும் மிகவும் புனிதம் வாய்ந்த தினமாகும். நாளைய தினம் (03.10.2009) சமுத்திர தீர்த்தம் நடைபெறும். வரலாற்றுடன் தொடர்புடைய வங்கக் கடற்கரையில் மாலை வேளையில் இத் திருவிழா நடைபெறும். நாளை மறுதினம் பட்டத் தீர்த்தமாகும். இந்த மூன்று தினங்களும் மிகவும் பெறுமதி வாய்ந்த மிகப் புனிதமான தினங்களாகும். ஆலயத்திற்கு வந்திருக்கும் அடியவர்களுக்கும் இங்கே வர முடியாது மனதால் மாயவனை வழிபடும் அடியவர்க்கட்கும் உலகெங்கும் பரந்து வாழும் சகல மக்களுக்கும் ஸ்ரீ வல்லிபுர மாயவனின் நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த நல்ல நாளில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சம் நிறைந்த நல் வாழ்வும் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம். சுபம் நன்றி

நாராயணன் நம்பிக்கை நயமிகும்

ஸ்ரீ ஆழ்வார் பீடம்
ஸ்ரீ வல்லிபுரக்கோவில்
புலோலி P.O

பிரம்ம ஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு J.P
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு J.P
பிரதம குருமார்கள்

## வல்லிபுர மகிமையுணர்ந்து சக்கரத்தாழ்வார் அருளாசி பெறுவோமாக



ஆதி அந்தமில்லாத பிரத்தியட்சமான காத்தற் கடவுளும் இலக்குமிநாயகருமாகிய நாராயண மூர்த்தியானவரே, வல்லிபுரத்து சக்கரத்தாழ்வார் என்னும் நாமத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இரணியன் என்னும் பெயருடைய கொடியோனாலே வருத்தமடைந்த தேவர்கள் தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கையில் இரட்சா கங்கணங்கள் கட்டியிருந்தார்கள். இரணியன் தேவர்களின் செயலை அறிந்து தனது தூதர்களினால் அவ் இராட்ச கங்கணங்களை அபகரிக்க எண்ணங்கொண்டு தூதர்களை ஏவவும் அவ் அசுர தூதர்கள் தேவர்களுடைய இரட்சா கங்கணங்களை எல்லாம் அபகரித்து கடலில் எறிந்துவிட்டார்கள்.

தேர்வர்கள் இரட்சா கங்கணங்கள் கிடைக்கவேண்டுமென பரமசிவனை நோக்கி முறையிட்டனர். பரமசிவன் விஷ்ணு மூர்த்தியை அழைத்து இரட்சா கங்கணங்களை எடுத்து தேவர்களுக்கு கொடுக்கும்படி வழிசெய்தார். அன்பர்களைத் காக்கும் பெரு விருப்பமுடையவராய் வசுதேவருக்கு குமாரரான விஷ்ணுமூர்த்தியானவர் மீன்வடிவமுடையவராய்த் தோன்றி அசுர [illegible]ர்களினாலே எறியப்பட்ட இரட்சா கங்கணங்களை கடலில் இருந்து எடுத்து வல்லிபுரத்துக் கடற்கரையில் வைத்துவிட்டு பின்னர் கடலில் மறைந்துவிட்டார் என்ற வகையான வரலாறுகொண்டமைந்தது சக்கரத்தாழ்வார் கோவில் என்று அழைக்கப்படும் வல்லிபுரத் தலமே. வரலாற்றுப் பழமையும் புதுமையும் மிக்க வல்லிபுரத்தான் தாள் பணிந்து ரதபவனி கண்ணாரக் காண்போம், ஆணவ மலமொடுங்கிட வேண்டுவோம், அருளாசி பெறுவோம்.

இம் மலர் வெளிவர உதவிய அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பக்த அடியார்களுக்கும் சக்கரத் தாழ்வார் அருளாசி கிடைக்கப் பிரார்த்தித்து அருளாசி பெறுவோமாக.

சைவப்புலவர், சிவநெறித்தொண்டன்,
இந்து தர்மாசிரியர், சைவ சித்தாந்த பண்டிதர்
குமாரசுவாமி சுமுகலிங்கம் J.P,
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி., சாவகச்சேரி

## எல்லோரின் வாழ்வுக்கும் காவல் புரியும் வல்லிபுர மாயவன் தேரேறி வருகிறான்



மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களிலாலும் பெருஞ்சிறப்புப் பெற்றது துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் திருத்தலமாகும். இவ் வல்லிபுரத்திலெழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு "ஆழ்வார்" என்ற திருநாமமே பன்னெடுங்காலமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ் ஆலயத்தின் பிரபாவம் தட்சணகைலாச புராணம், தட்சண கைலாச மான்மியம் (வல்லிபுர வைபவம்) நகுலமலைக் குறவஞ்சி,திருக்கேதீஸ்வர புராணம் என்னும் நூல்களில் பெரிதும் பேசப்பட்டுள்ளது. இன்னும் சிங்கள மொழியிலுள்ள "கோகுல சந்தேச" என்னும் பிரபந்தத்தில் வல்லிபுரம்,பொன்னாலை பற்றிய செய்திகள் மிக விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

வல்லிபுரக் கோயிலைச் சூழவுள்ள மணற்பகுதிகள் புராதன காலத்தில் மிக உன்னத நிலையிலிருந்த ஓர் இராசதானி என்பது ஆய்வாளர் பலருடைய கருத்தாகும். "வல்லிபுரம்" ஓர் துறைமுகமாக இருந்தது மட்டுமன்றி தலைநகராகவும் இருந்தது என்பதற்கான புதைபொருட் சின்னங்கள் கவனத்துக்குரியதாகும். கி.பி 8 ஆம் நூற்றாண்டில் கலிங்க அரசன், உக்கிரசிங்கன் கதிரமலையரசை கைப்பற்றி மாருதப்புரவீகவல்லியென்னும் சோழ குமாரியை மணந்து பின்னர் கதிரைமலையை விட்டு நீங்கி சிங்கைநகரை இராசதானியாக்கினான். பருத்தித்துறைக்கு அண்மையில் மணல் மேடுகள் உள்ள வல்லிபுரமே சிங்கை நகரமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் வடகீழ்ப்பகுதியை அண்டிய கடற்கரையைத் தனது தீர்த்தக் கரையாகக் கொண்டு விளங்குவது இவ்வாலயமாகும்.

### மூலாலயத்தில் சக்கரஆழ்வாரின் அருளாட்சி

சுதர்சனமே விஷ்ணு ஆகும். விஷ்ணுவே சுதர்சனமாகும்.சுதர்சனமானது மூலஸ்தானத்தில் காட்சியளிக்கின்றது. அரங்கனாக விளங்குகின்ற கிருஷ்ண பரமாத்மாவின் கையிலிருப்பதுதான் இந்த சுதர்சனம். தர்மத்தின் முடிந்த பயன் இன்பம் அல்லவா? அதர்மத்தின் முடிந்த பயன் துன்பமல்லவா? கண்ணன் உயிர்களைக் காக்கும் கடவுள். இந்த தர்மசக்கரத்தைக் கொண்டு அவன் அனைத்தையும் காத்து வருகின்றான். அறம்செய்பவர்களை ஆழி காப்பாற்றுகின்றது. கேடு செய்கின்றவர்களை அது துன்புறுத்துகின் றது. சக்கரத்துக்கு மறைந்திருந்து யாரும் எச் செய லையும் செய்ய முடியாது.இத்தனை காவல் தெய்வ திருவடிவமாக சக்கரம் சக்கரத்தாழ்வாராக வழி படப்படுகின்றது.

வல்லிபுர மாயவனின் மஹோற்சவங்களில் திருத் தேர் உற்சவத்தைக் காண வருகின்ற அடியவர்கள் ஏராளம். மச்ச அவதாரமாகத் தோன்றிய மூர்த்தியல்லவா? மாயவன், ஆழிப்பிரானாக, நீர்கடலானாக பல விருட்சங்கள் சூழ்ந்த வல்லிபுரத்தில் எழில்மிகு தேரில் ஆரோகணித்து வருகின்ற காட்சி அற்புதமானது. எல்லோரும் நல்ல வண்ணம் வாழ வல்லிபுர ஆழ்வார் அருள்செய்யவேண்டும்.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன் J.P
ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி

ருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்பவர்கள்

பரந்தாமன் பாதம் பணிவோம்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டேட்டின்
ஏகவிநியோகஸ்தர்கள்
பஜாஜ் மோட்டோர் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளரும்
இலவச சேவிஸ்சேவை முகவரும் அனைத்து வகையான
திருத்தவேலைகளையும் ஒரே இடத்தில் செய்துகொள்ள
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
சுரேஸ் மோட்டோர்ஸ்
அன் என்ஜினியர்ஸ்
கண்டிவீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

தேர்பவனி வரும்பரந்தாமா உன்பாதம் நாடுகின்றோம்
நல்லருள் புரிவாய் ஐயா!
தரம், சுவை நிரந்தரம்
தரமான ஐஸ்கிறீம் உலகின் முன்னோடிகள்
யாழ்.நகரில் என்றும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
லிங்கம் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தேரேறும் மாயவா தொல்வினைகள் தீர்க்கவா வா!
சாவகச்சேரி நகரில் திருமணப் பட்டுப் புடவைகள்
நவீனரக ஆடைத் தெரிவுகள் அனைத்தையும் உங்கள்
எண்ணம்போல் தெரிவு செய்து அள்ளிச் செல்ல
நாடவேண்டிய இடம்
அன்னை ரெக்ஸ்
இல.11 நவீன சந்தை, சாவகச்சேரி

வரம் அருள்வாய் வேங்கடேசா
செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் அனைத்து
ஆயுள் காப்புறுதி தேவைகட்கும் உடன் நாடவேணடிய
முகவர் தென்மராட்சி சாவகச்சேரியில்
பொன்னம்பலம் யோகேஸ்வரா
T.P- 0776787985
வீரபத்திரர் கோயிலடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி

வல்லிபுரத்தான் வரம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்
திருமணப் பட்டுப் புடவைகளுக்கும் நவீன ரக ஆடைத்
தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட்
ஆடைகளுக்கும் புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை நித்தம்நித்தம்
அறிமுகம் செய்யும் ஒரே ஸ்தாபனம் யாழ்.நகரில்
வாணி ரெக்ஸ்
இல :- 81 பெரிய கடை, யாழ்ப்பாணம்.

வரம் தருவாய் வல்லிபுரா!
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, புதுமனை புகுவிழா
நித்திய தேவைகள், பாடசாலை உபகரணங்கள்,
அனைத்து வைபவங்களின் தேவைக்கேற்ப சகல
விதமான அழகுசாதனப் பொருட்களையும் ஒரே இடத்தில்
தரமாகவும் நியாய விலையிலும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
லிங்கம்ஸ் அழகு சாதன மாளிகை
சாவகச்சேரி

ஸ்ரீரங்க நாதனே! சரணம்! சரணம்!
அனைத்து பலசரக்குப் பொருட்கள் விற்பனையில்
சாவகச்சேரி நுணாவில் மத்தியில் முன்னணி நிறுவனம்
கோபி பல்பொருள் வாணிபம்
பால்மா வகைகள், மளிகைப் பொருட்கள், அழகு சாதனப்
பொருட்கள், கட்டட வடிவமைப்புக் கற்கள், பூக்கள், பூச்சாடிகள்,
பெயின்ற் வகைகள், பாடசாலை உபகரணங்கள்
என்பவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்
கண்டிவீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி

# எமது நாட்டை அடிமையாக்குவதே சர்வதேசத்தின் தேவை; அதற்காகவே சர்வதேச இராஜதந்திரிகள் படையெடுப்பு

## குமுறுகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

புலிகளின் ஈழக் கனவை நனவாக்கும் வகையில் சர்வதேச பயங்கரவாதம் இலங்கையுடன் தனது இறுதிக்கட்டப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இருக்கின்றது என்பதை நிரூபித்து டேவிட் மிலிபண்ட் மற்றும் பேர்னாட் குச்சனரின் இலங்கை விஜயத்தை உடனடியாக தடைசெய்ய வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு தேசிய நூலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டு விட்டாலும் சர்வதேசப் பயங்கரவாதம் எமது நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா, நோர்வே உள்ளிட்ட பல ஆதரவு நாடுகள் எமது நாட்டில் போர்க் குற்றம் இழைக்கப்பட்டிருப்பதாக தொடர்ந்தும் சர்வதேச மட்டத்தில் குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன.

அத்துடன் குற்றவியல் விசாரணைகளுக்ும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் பின்னணியில் இருந்து செயற்படுபவர் எரிக் சொல்ஹெய்ம் ஆவார்.

எமது நாட்டுக்கு எதிராகவும் அதே நேரம் பிரிவினைவாதத்துக்கு ஆதரவாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கு உள்ளூரில் உள்ளவர்களும் உறுதுணையாக செயற்படுகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்லாது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் இதில் இணைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் நோர்வேயின் சொல்ஹெய்மும் இணைந்து மேற்கொண்ட தனி ஈழம் என்ற பிரிவினைப் போக்கு தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. அதனை முன்னெடுப்பதும் தனி ஈழம் உருவாக்குவதுமே இவர்களின் உள்நோக்கமாக இருக்கின்றது.

இவர்களது வருகை மற்றும் தலையீடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி, ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை மற்றும் சர்வதேச உதவிகள் அனைத்துமே உள்நோக்கம் கொண்டவையாகும். வளம் நிறைந்த எமது நாட்டை சூறையாடுவதே இவர்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

இந்த விடயத்தில் அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டும். மேலும் பிரான்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னர் மற்றும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபண்ட் ஆகியோர் இலங்கை வருவதற்கான அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை.

புலிகளுக்காக வேலை செய்து தற்போது சிறையிலிருக்கும் திஸ்ஸ நாயகத்தை வெளியில் எடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே அவர்கள் இங்கு வருகின்றனர். எமது நாட்டை அடிமையாக்குவதே சர்வதேசத்தின் தேவையாகவும் இருக்கின்றது. இதற்காகவே சர்வதேச இராஜதந்திரிகள் படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். (ஓ-6)

## ஜே.வி.பியினால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல்

தமது அரசியல் கொள்கையை முன்னெடுப்பதற்கான உரிமை மீறப்பட்டுள்ளது என்றும் இது தங்களது அடிப்படை மனித உரிமையை மீறுகின்ற செயலாகும் என சுட்டிக் காட்டி ஜே.வி.பி. உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை கடந்த புதன்கிழமை தாக்கல் செய்துள்ளது.

மக்கள்விடுதலை முன்னணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் தென் மாகாண சபையின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர் குழுத்தலைவர் சிசிர ஆகியோரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

நெடுஞ்சாலையில் கட்சிச் சின்னத்தையும் விருப்பு இலக்கங்களையும் வரைந்து அசுத்தமாக்கினார்கள் என்று குற்றஞ்சாட்டி மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலை யில் தென் மாகாண சபைக்கான தேர்தலின் போது அரசாங்கம் அரச சொத்துக்களையும் அரச ஊடகங்களையும் பயன்படுத்தி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. இது தமது அரசியல் கொள்கையை முன்னெடுக்கும் உரிமையை மீறுகின்ற செயலாகும் என்றும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மனுவை விசாரித்த தங்காலை நீதிவான் ஜே.வி.பியின் தென் மாகாண சபை வேட்பாளர்களை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டதுடன் வழக்கை பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைத்தார். (ஓ-6)

# இலங்கையிலுள்ள நோர்வே தூதரகத்தை மூடி இராஜதந்திர உறவுகளை துண்டியுங்கள்

## விமல் வீரவன்ச வலியுறுத்து

(கொழும்பு)

கொழும்பில் உள்ள நோர்வேயின் தூதுவரை உடனடியாக வெளியேற்றுமாறு அரசை கோரியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் செயலாளர் விமல் வீரவன்ச, நோர்வேயுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் இலங்கை துண்டித்துக் கொள்வதுடன் நோர்வேயின் தூதரகத்தையும் மூடிவிட வேண்டும் என வலியுறுத்தியிருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நோர்வே ஆதரவளித்தது என்பதும் சீனாவில் இருந்து எரித்திரியா ஊடாக சொல்ஹெய்மின் ஆதரவுடன் ஆயுதங்கள் கடத்தப்பட்டதென்பதும் இப்போது நிருபணமாகியுள்ளது என கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்த அவர் தொடக்கம் முதலே சமாதான முயற்சிகளில் நோர்வேயின் சம்மதத்தையிட்டு தான் சந்தேகித்ததாகவும் சுட்டிக் காட்டினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பக்கச் சார்பற்ற முறையில் நோர்வே ஒருபோதுமே செயற்படவில்லை எப்போதும் விடுதலைப் புலிகளின் பக்கமே சார்ந்து நின்ற அவர்கள் இலங்கைக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்துள்ளார்கள்.

இந்நிலையில் நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளைத் தொடர வேண்டிய எந்த விதமான நியாயமான தேவையும் இலங்கைக்கு இல்லை. இதுதான் அவர்களுக்கு எதிராகக் கடுமையாக நடந்து கொள்வதற்குப் பொருத்தமான தருணம்.

இந்த விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சர் உடனடியாகத் தலையிட்டு கொழும்பில் உள்ள நோர்வேயின் தூதுவரை இங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இராஜதந்திரிகளுக்குள்ள சிறப்புரிமைகளையும் அதிகாரத்தையும் பயன்படுத்தியே விடுதலைப் புலிகளுக்கான ஒலிபரப்புச் சாதனங்கள் கொண்டுவரப்பட்டன.



எம்முடனான இராஜதந்திர உறவுகளைப் பேணிக்கொள்ளும் அதே வேளையில் எமது உள்நாட்டு விவகாரங்களிலும் தேவையற்ற வகையில் தலையிட முடியும் என்பதற்கு இது மற்றைய நாடுகளும் ஒரு உதாரணமாகி விடலாம்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்கா விசா ரணை நடத்தப்போவதாகத் தெரிவிக்கின்றது. அடுத்த கூட்டத்துக்கான நாளினை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கியது யார்? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ஓ-6)

## கடற்படையினரைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

இலங்கை அரசால் விடுதலைப் புலிகள் இயக்கம் படைத்துறை ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட போதும் கடற்படையினரைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் படையினர் விழிப்புணர்வுடனேயே இருக்க வேண்டும் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

போர் முடிபடைந்து விட்டதாக அரசு அறிவித்தபோதும் முன்னர் திட்டமிட்டபடி கடற்படையைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

ஏற்கனவே போடப்பட்ட திட்டங்களை இன்றைய நிலையைக் கருத்தில் கொண்டு அரசு தள்ளுபடி செய்வது எதிர்காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் அத்திட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

# நவம்பர் 19இற்குப் பின் ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு எந்நேரமும் வெளிவரலாம்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத் தேர்தல் குறித்தே கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனால் எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியிடப்படலாம் என்பதை எதிர்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி எந்தவிதமான அக்கறையும் செலுத்தாமல் உள்ளது. ஆனால் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என்பதை எதிர்க்கட்சி புரிந்து கொள்ள வேண்டும். தென் பகுதியில் அரசாங்கம் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. துறைமுகம், விமான நிலையம், வீதிகள், வீடுகள் என எமது அபிவிருத்தித் திட்டங்களை பட்டியலிடலாம்.

ஆனால் எதிர்க்கட்சி இன்று பேசிக் கொண்டிருக்கின்ற விடயங்கள் என்ன? இடம்பெயர்நத மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்பட வேண்டும். ஜி.எஸ்.பி வரிச்சலுகை விவகாரம் மற்றும் தங்க விற்பனை இந்த விடயங்களையே இன்று ஐக்கிய தேசியக் கட்சி தூக்கிப் பிடித்துள்ளது.

ஆனால், மேற்கூறப்பட்டுள்ள விடயங்கள் எந்த விதத்திலும் தென்மாகாண சபை தேர்தல் தாக்கத்தை ஏற்படுத்தாது. இந்த விடயங்கள் தென்பகுதி மக்களை கவரப் போவதில்லை என்றார். (ஓ-6)

# இந்தோனேசியாவில் இருந்து அவுஸ்திரேலியாக்குள் பிரவேசிக்க முயன்றபோது கைதாகிய 8 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய கடற்படையினர் நேற்று முன்தினம் 67 பேருடன் சென்ற படகு ஒன்றை கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையர்களும் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த மாதத்தில் மாத்திரம் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்த இலங்கையர்கள் உட்பட்ட சட்டவிரோத குடியேறிகளின் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்துள்ளது.

இவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா குடிவரவு சட்டத்தின் சரத்துக்களை தளர்த்தியதை அடுத்து அந்த நாட்டுக்கு செல்லும் சட்ட விரோத குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதன் அடிப்படையில் 30க்கும் மேற்பட்ட சட்டவிரோத படகுகள் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளன. இதேவேளை இந்தோனேசியாவில் இருந்து அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற போது கைது செய்யப்பட்ட 8 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இலங்கை திரும்பியுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையைச் சேர்ந்தவர்களாவர்.

கடந்த மே மாதம் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் பணிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகம் மேற்கொண்டிருந்தது. இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் விடுவிக்கப்பட்டார்களா அல்லது விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா என்ற விடயங்கள் தெரியவரவில்லை. (ஓ-6)

எதிலும் ஓர் ஒழுங்கை கடைப்பிடியுங்கள். சீரிய முறையில் அணி வகுத்து வைக்கப்பட்டிருக்கும் படையே எதிரிக்கு பயத்தைக்கொடுக்கும்.

~ ஓர் அறிஞர்

வலம்புரி

## பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட தமிழ் இளைஞர் யுவதிகளே!

பலவருடங்களுக்குப் பின்னர் பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

யுத்தசூழல் நிலவிய போது தமிழ் இளைஞர் யுவதிகளை பொலிஸில் சேர்த்துக் கொள்வதற்கு அரசும் தயாரில்லை. பொலிஸ் சேவையில் இணைவதற்கு தமிழ் இளைஞர்களும் தயாரில்லை என்ற நிலையில் பொலிஸ் சேவையில் தமிழர்கள் இல்லையென்றாகிவிட்டது.

எனினும் காலமாற்றத்தில் தமிழ் மக்களின் தேவைகள் அதிகரிக்க யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டமையால் மட்டற்ற மகிழ்வடைவதற்கு தமிழ்மக்கள் தயாரில்லை.

எனவே இலங்கையில் பொலிஸ் சேவை தொடர்பில் தமிழ் மக்கள் நேர்க்கணிய நினைவுகளைக் கொண்டிருக்கவில்லை.

பொலிஸ் பதிவு, பொலிஸ் சோதனை, விசாரணை, திட்டமிட்ட தண்டனைகள் என்ற நினைவு போன்ற இன்னோரன்ன காரணங்கள் பொலிஸ் சேவையில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்க முடியாமல் போயிற்று.

அதேநேரம் 1995ஆம் ஆண்டு படையினர் யாழ்ப்பாணத்தை மீட்டதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையங்களின் செயற்பாடு யாழ். குடாநாட்டில் மீளவும் ஆரம்பித்தது. இவ்விதம் ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸார் அறவே இல்லாமையால் மக்கள் பட்டவேதனை சொல்லுந்தரமன்று.

மொழிப்பிரச்சினை பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையேயான தொடர்புக்கு பெரும் தடையாக அமைந்திருந்தது. இந் நிலை 14 வருடங்கள் நீடித்த நிலையில் தற்போது யாழ். கு டாநாட்டைச் சேர்ந்த சுமார் 601 தமிழ் இளைஞர் யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ் இணைப்பு பொலிஸ் நிலையங்களில் நிலவக் கூடிய தமிழ் தெரிந்த பொலிஸாரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதாக அமையலாம். ஆனால் பொலிஸ்–தமிழ் மக்கள் தொடர்பில் வலுவான நல்லுறவையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆயினும் பொலிஸ்–பொதுமக்கள் உறவு மேம்படவேண்டுமாயின் புதிதாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட தமிழ் இளைஞர் யுவதிகள் தம்மை ஒழுங்குபடுத்தி கொள்வது கட்டாயமனதாகும்.


இலங்கையில் தமிழ் இனம் பட்ட–படும் துன்ப துயரங்கள் சொல்லுந்தரமன்று. அவர்கள் வாழ்வில் அனுபவித்த இழப்புகள், துயரங்கள் ஏராளம். இந்த உண்மையை நீங்கள் ஒரு போதும் மறத்தலாகாது.

பொலிஸ் வேலை கிடைத்துவிட்டதே இனிமேல் எதுவும் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற நினைப்பு உங்கள் உள்ளத்தில் குடி கொள்ள ஆரம்பிக்கலாம். பக்கசார்பு, இலஞ்சம் என்ற புதிய முறைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம். இவை அனைத்திலிருந்தும் நீங்கள் தப்பித்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் பொலிஸார் நேர்மை தவறாதவர்கள், நீதியானவர்கள், சட்டம், நீதி, ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக தங்களை அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவர்கள் என்ற நற்பெயரை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் அதுவே நீங்கள் உங்கள் இனத் துக்கு செய்யும் நன்றியாகும்.

இதைவிடுத்து பொலிஸ் என்றால்... அப்படித்தான் என்ற பொதுமைக்குள் நீங்கள் அகப்பட்டால் உங்களாலும் தமிழ் இனம் துன்பப்படும் அபாயம் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

# யாழ்ப்பாணத்தில் சித்தர் பரம்பரை உருவாகக் காரணமாயமைந்த கடையிற் சுவாமிகள்



## இன்று கடையிற் சுவாமிகள் குருபூஜை தினமாகும்

இந்தியாவில் இருந்து வருகை தந்து ஈழத்தில் சித்தர் பரம்பரையை உருவாக்கியவர்களில் ஒருவர் பெரிய கடையில் வாழ்ந்த கடையிற்சுவாமிகள் ஆவார். இவர் 19 ஆம் நூற்றாண்டில் மத்தியில் வாழ்ந்தார். இவர் ஒரு பொருளை கொடுத்தால் வியாபாரம் செழித்தோங்கும். இதனால் வியாபாரிகள் அதிகம் பிரியம் வைத்திருந்தனர்.

இவரது சீடர்கள் செல்லப்பா சுவாமி, சடைவரதர், சின்னசுவாமி, குழந்தை வேற்சுவாமி, வைரமுத்து செட்டியார் ஆகியோராவார்.

கடையிற் சுவாமி ஆரம்பத்தில் பெங்களூரில் நீதிபதியாக இருந்தார். பின்னர் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்க மனம் ஒப்பாமையினால் அத்தொழிலை விட்டு துறவியானார்.

பாரதத்தில் இருந்து ஈழத்துக்கு வருகை தந்து ஈழத்தில் சித்தர் பரம்பரை உருவாக்கிய 4 சித்தர்களின் சமாதிக் கோயில்களும் நாட்டின் 4 திக்குகளிலும் காணப்படுகின்றன. அவை வடக்கில் யாழ்ப்பாணம் நீராவியடியில் – கடையிற் சுவாமிகள், கிழக்கில் காரைதீவில் – சித்தானைக்குட்டி, மேற்கில் கொழும்பு முகத்துவாரத்தில் – பெரியானைக்குட்டி, நாவலப்பிட்டி குயின்ஸ் பரியில் – நவநாத சித்தர் ஆகியனவாகும்.

கடையிற் சுவாமிகள் பிசாசு பிடித்தவர் போல பெரியகடை தெருவழியே சென்ற போது அவரை தவறாக புரிந்தவர்கள். அவரை கொழும்புக்கு அழைத்துச் சென்று வைத்தியம் செய்ய தீர்மானித்தனர்.

அந்த வகையில் நீதிமன்றத்தில் காட்டி, நீதிபதி உத்தரவின் பேரில் கொழும்புக்கு அழைத்துச் செல்ல முன் பொலிஸ் நிலையத்தில் ஓர் அறையில் பூட்டி வைத்தனர். அடுத்தநாள் சுவாமிகள் கொழும்புக்கு அழைத்துச் செல்ல அறைக் கதவை திறந்த போது சுவாமி அங்கு இல்லை. பழையபடி கடை வீதியில் உலாவித் திரிந்தார்கள். இதன்பின் பல ஊர்க்காரர்கள் அவரின் அருமை பெருமையை உணர்ந்த பின் அவரிடம் பக்தி கொண் டனர். அவர்களில் ஒருவர் சார்ஜன் சுவாமிகள் ஆவார்.

கடையிற் சுவாமி இங்கு வர மூல காரணமாக இருந்தவர் யாழ்ப்பாண வைரமுத்து செட்டியார் ஆவார். இவர் அடிக்கடி இந்திய யாத்திரை செய்பவர். ஒரு முறை இந்தியாவில் முத்தியானந்தருடன் இருந்த போது பாரதத்தில் பல மகான்கள் காணப்பட நமது நாட்டில் ஒருவரும் இல்லை என கவலை கொண்டார்.

அதே காலத்தில் சமய மறுமலர்ச்சி அடியார் பணி என்பன தலைசிறந்து விளங்கின. "அண்ணவார் அடியார் தமை அமுது செய்வித்தலே மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்'' என்ற கொள்கை காணப்பட்டது. வீட்டில் பிடியரிசி கொடுப்பது, மடங்களில் அன்னதானம் கொடுப்பது போன்றன காணப்பட்டன. இந்நிலையில் வைரமுத்து செட்டியார் சுவாமியை யாழ்ப்பாணம் அழைத்து வந்தார். அவர் பெரிய கடையிலேயே வசிப்பிடமாகக் கொண்டதால் எல்லோரும் கடையிற் சுவாமி என அழைத்தனர்.

கடைசிகாலத்தில் வண்ணார் பண்ணை நீராவியடியில் நிலையாக இருந்து நீராவியடியில் தென்மேற்கே ஒரு குடிசையில் சுவாமி தங்கி இருந்தார். அந்த இடத்தில் 1891 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் புரட்டாதி நட்சத்திரத்தில் சமாதி அடைந்தார். அக்காலத்தே சுவாமிகளுடன் இருந்த அன்பர்களது பெரு முயற்சியினால் சமாதி கோயில் ஒன்று எழுப்பப்பட்டது. இப்படி பல அற்புதங்களை செய்ததுடன் நின்று விடாமல் இலங்கையில் ஒரு அருட்பரம்பரைக்கு மூலவித்திட்ட குரு முதல்வராவர்.

கு. கோபிராஜ் – சண்டிலிப்பாய்.

# புனருத்தாரணம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை துரிதப்படுத்தி மக்களை குடியமர்த்துங்கள்

## அங்கிலிக்கன் ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஒரு முகாமில் உள்ள மக்களை வேறொரு முகாமுக்கு மாற்றும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என அங்கிலிக்கன் தேவாலய தலைவர் வணக்கத்துக்குரிய ஆயர் டுலிப்டி சிக்கேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் விரைவில் குடியேற்றப்பட வேண்டும் என இலங்கையின் அங்கிலிக்கன் தேவாலய தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புனருத்தாரண பணிகளை விரைவுபடுத்தும் அதேநேரம் நிலக்கண்ணிகளை அகற்றும் பணிகளையும் விரைவாக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் முகாம்களில் உள்ள மக்களை விடுவிப்பதன் மூலம் ஒக்டோபர் மாதத்தில் ஏற்படவுள்ள பருவப் பெயர்ச்சி மழையினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருப்போர் அவர்களின் சொந்த வீடுகளுக்கு அனுப்பப்படுவது அவசியம் என ஆயர் டுலிப் சிக்கேரா கேட்டுள்ளார்.

முகாம்களில் உள்ள மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை தோன்றியிருப்பதற்கான வெளிப்பாடுகளே அண்மைக்காலத்தில் முகாம்களில் ஏற்பட்ட சம்பவங்களாகும் என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒரு முகாமில் உள்ள மக்களை வேறு ஒரு முகாமுக்கு மாற்றும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அவர் அவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என கோரியுள்ளார். (ஓ–6)

# வெள்ளி நற்சிந்தனை 91

## பக்தியின் மொழி தமிழ்

உலக வாழ்க்கையில் துன்பங்களை எதிர்கொள்ளும் போது இறைவன் பற்றிய சிந்தனை பலருக்கு ஏற்படுகிறது. முன்னர் மறந்த வழிபாட்டு நடைமுறைகளை மீண்டும் செய்ய வேண்டும் என்ற நினைப்பு உண்டாகிறது. மனித நிலையில் ஏற்படும் துன்பம் மனிதரால் தீர்க்கப்பட வேண்டும் என்பதும் பலரது விருப்பமாகும். தான் துன்புறும் வேளையில் யாராவது தன்னைத் தாங்கி அத்துன்பத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என நினைப்பவரை யாரும் கவனிக்காத நிலையும் உண்டு. இன்றைய அவசர உலகியல் வாழ்வில் இப்படி எதிர்பார்ப்பதில் பயனில்லை. நாவுக்கரசர் இத்தகையதொரு அல்லலை அனுபவித்தவர்.

சைவ வாழ்வியலில் மகிழ்வாய் வாழ்ந்தவர். அடுத்தடுத்து வந்த இழப்புகள் அவருடைய அடிப்படை நம்பிக்கையையே தகர்த்து விட்டன. அதனால் சைவத்தை விட்டுச் சமணசமயத்திலே சேர்ந்தார். சமணர் போதனைகள் அவருடைய பெருந் துன்பத்தை ஆற்றின. ஆனால் கொடுமையான சூலை நோய்வாய்ப்பட்டு உடல் துன்பத்தை அநுபவிக்க நேர்ந்த போது சமணர்களின் வைத்தியம் பயனளிக்கவில்லை. மீண்டும் சைவசமய வாழ்வியலுக்கு அவர் திரும்பி வந்தார்.

இந்த அனுபவம் அப்பருக்குப் புதியதொரு வாழ்வியலைப் பின்பற்றுவதற்கு உதவியது. பக்தி செய்து வாழும் புதியதொரு பாதையிலே அவர் நடக்கத் தொடங்கினார். இறைவன் கோலத்தைக் காண வேண்டும் என்பதையே தன் வாழ்வின் இலக்காக்கினார். பல திருக்கோயில்களுக்குச் சென்று பூமாலை தொடுத்தும் பாமாலை சாற்றியும் மனமுருகி நின்றார். தன் உடல் உறுப்புகள் எல்லாம் இறைபணிக்காகவே தமக்குத் தரப்பட்டவை என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அதனால் உடல் மொழியிலே இறையனுபவத்தைப் பாடியுள்ளார்.

திருவையாறு தலத்திலே நடந்து செல்கின்ற போது அவர் உள்ளமும் உடலும் ஒத்திசைந்து பக்தி நெறியிலே செல்வதை அவர் பாடிய பதிகப்பாடல்கள் துல்லியமாக விளக்கி நிற்கின்றன. தொடுக்கப்பட்ட புதிய கண்ணி மாலையை அணிந்த

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனை அழகான சித்திர வேலைப்பாடமைந்த சோலையணிந்த இறைவியோடு போற்றிப்பாடி வட்டமிட்டு ஆடிக் கொண்டு போகிறார். வட்டமிட்டு வழிபடும் மரபு இன்றும் உள்ளது.

உலகை வலம் வரும் பரிதியொடு இறைவனை வாழ்த்தி வணங்குவதற்காகத் திருவையாற்றிற்குச் செல்லும் போது அவர் கண்ட காட்சி அவரது மனத்தை மகிழ்வித்தது. அவர் முன்னே கோழி பெடையோடு சேர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்தக் குளிர்மையான பறவையின் கால்கள் இறைவன் இறைவியின் திருப்பாதம் போல அப்பருக்குக் காட்சி தந்தன. விடிகாலைப் போதில் உள்ளத்தை வந்து நிறைவித்த அப்பறவைகளின் கோலம் அப்பரைப் பக்தி வயப்படுத்திப் பாட வைத்தது.

''போழிளங் கண்ணியினானைப் பூந்துகிலாளொடும் பாடி
வாழியெம் போற்றியென்றே வட்டமிட்டாட வருவேன்
ஆழி வலவனின்றேத்து மையாறடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.''

# இந்தோனேசியாவில் பயங்கர பூகம்பம்! 1000 பேர் பலி; ஒரு நகரமே தரைமட்டம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டை பூகம்பம் தாக்கியதில் ஒரு நகரமே தரைமட்டமானது. இதில் ஆயிரம் பேர் பலியாகிவிட்டதாக அஞ்சப்படுகிறது.

பூமியில் அடிக்கடி பூகம்ப தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதியில் இந்தோனேசியா நாடு





அமைந்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி இந்தோனேசியா கடல் பகுதியில் 9.15 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டு அதன் காரணமாக உருவான சுனாமி அலைகள் இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளை தாக்கியதில் 2 இலட்சத்து 32 ஆயிரம் பேர் பலி ஆனார்கள்.

அதன்பின்னர், அந்த பகுதியில் அவ்வப்போது நில நடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், நியூசிலாந்து அருகே பசுபிக் பெருங்கடலில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட பூகம்பத்தின் காரணமாகவும், அதனால் உருவான சுனாமி அலைகள் தாக்கியதிலும் சமோவ் என்ற சிறிய தீவிலும், அதன் அருகே உள்ள அமெரிக்காவுக்கு சொந்தமான சமோவ் தீவிலும் 130-க்கும் அதிகமான பேர் உயிர் இழந்தனர்.

இந்த பரபரப்பு ஓய்வதற்குள், இந்தோனேசியா நாட்டில் இந்திய நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 3-16 மணிக்கு பயங்கர பூகம்பம் ஏற்பட்டது.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள பதாங் நகரில் இருந்து வடமேற்கு திசையில் 53 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கு அடியில் 87 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த பூகம்பம் ஏற்பட்டது. இந்த பூமி அதிர்ச்சி ரிக்டர் அளவுகோலில் 7.9 புள்ளிகளாக பதிவானது. கடந்த 2004 ஆம் ஆண்டு பூகம்பம் ஏற்பட்ட பகுதியிலேயே இந்த பூகம்பமும் ஏற்பட்டது.

இந்த பூகம்பத்தால் பதாங் நகரமும், அதை சுற்றியுள்ள பகுதிகளும் நாசமாயின. ஏராளமான வீடுகள், கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. பதாங் நகரில் உள்ள பல ஹோட்டல் கட்டிடங்கள் தரை மட்டமாகி விட்டன. ஒரு மருத்துவமனை சந்தைக் கட்டிடம் ஆகியவையும் பலத்த சேதம் அடைந்தன. பதாங் விமான நிலையத்தின் கூரையும் இடிந்து விழுந்தது.

கட்டிடங்கள் அதிர்ந்ததும் மக்கள் எழுந்து வெளியே ஓடினார்கள். பூகம்பத்தின் காரணமாக வீதிகள் இரண்டாக பிளந்தன. சில இடங்களில் பாலங்கள் உடைந்து சரிந்தன.

குடிநீர் குழாய்கள் உடைந்ததால் வீதி எங்கும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பூமிக்கு அடியில் புதைக்கப் பட்டு இருந்த தொலைபேசி கேபிள்களும் அறுந்தன. கட்டிடங்கள் இடிந்ததால் சில இடங்களில் தீப்பிடித்தது. பதாங் நகரம் சுமத்ரா தீவின் பிற பகுதி களில் இருந்து துண்டிக்கப் பட்டது.

பூகம்பத்தின் காரண மாக பதாங் நகரில் இருந்து நூற்றுக்கணக் கான கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஜகார்த்தா நகரில் (இந்தோ னேசியாவின் தலைநகர்) உயரமான கட்டி டங்களும் குலுங்கின. இதேபோல் நீண்ட தொலைவில் உள்ள சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் உள்ள கட்டிடங்களும் அதிர்ந்தன.

பூகம்பம் ஏற்பட்டதும், ஹவாய் தீவில் உள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையத்தின் சார்பில் இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பூகம்பம் ஏற்பட்ட இந்தோனேசியாவில் பெரும் பரபரப்பும், பீதியும் ஏற்பட்டது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

ஆனால் பின்னர் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

பூகம்பத்தின் காரணமாக பதாங் நகரிலும், அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் சிக்கி நூற்றுக் கணக்கான பேர் பலியானதாகவும், பல்லாயிரக்கணக்கான பேர் இடிபாடுகளில் சிக்கி காயம் அடைந்து இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

ஆனால் இதுபற்றிய தகவல் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. இடிந்து விழுந்த மருத்துவமனை கட்டித்திற்குள் மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமான பேர் சிக்கி இருப்பதாக சுகாதார அமைச்சக தலைவர் ரஸ்டம் பகயா தெரிவித்தார். மொத்தத்தில் பூகம்ப சாவு எண்ணிக்கை மிகமிக அதிகமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

வீதி போக்குவரத்தும், தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டு இருப்பதால் மீட்புக்குழுவினரால் பதாங் நகரை இன்னும் நெருங்க முடியவில்லை என்று இந்தோனேசிய வானிலை அதிகாரி ரகுமத் டிரியோனோ கூறினார்.

9 இலட்சம் பேர் வசிக்கும் பதாங் சுமத்ரா மாகாணத்தின் தலைநகர் ஆகும். இது அடிக்கடி பூகம்பம் ஏற்படும் பகுதியில் அமைந்துள்ளது. எனவே என்றாவது ஒருநாள் பெரிய அளவில் பூகம்பம் ஏற்படும் போது இந்த நகரம் முற்றிலுமாக அழிந்து விடும் ஆபத்து இருப்பதாக பூகோளவியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-6)

## சுனாமி போன்ற அனர்த்தங்களுக்கு சனிப் பெயர்ச்சியின் தாக்கமே காரணம்

### ஜோதிடர் காழியூர் நாராயணன்



(சென்னை)

நியூசிலாந்து அருகே பசுபிக் பெருங்கடலில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட சுனாமி அரக்கனால் சாமோவ் நாடு, மற்றும் அமெரிக்கன் சமோவ் தீவை சேர்ந்த 144 பேர் உயிரிழந்தனர். ஏராளமான கட்டிடங்கள் இடிந்தன. இதே போல இந்தோனேஷியாவில் சுமத்ரா தீவில் பிற்பகலில் ஏற்பட்ட பூகம்பத்தால் அங்குள்ள பதாங் நகரமே இடிந்து நாசமானது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார் கள்.

இந்த திடீர் பேரழிவுகளுக்கு கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற சனிப்பெயர்ச்சியின் தாக்கமே காரணம் என்று சென்னையின் பிரபல ஜோதிடர் காழியூர் நாராயணன் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

உலக நடப்புகள் யாவுமே பிரகத் ஜாதகம் என்று சொல்லக்கூடிய மன்டேன் சோதிடத்தின் படி மிக துல்லியமாக இதுவரை நடந்து வந்துள்ளன.

நாஸ்டர் டாமஸ் போன்ற 16 ஆம் நூற்றாண்டு ஜோதிடவல்லுனர்கள் அன்றே இதனை கணித்து கூறி உள்ளனர். இன்று நிகழ்ந்து வரும் ஜல (நீர்) சம்பந்த மான சுனாமி போன்ற பேரழிவுகளுக்கு காரணமாக இருப்பது சனி மற்றும் குருப்பெயர்ச்சிகள் ஆகும்.

கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி நடந்த சனிப்பெயர்ச்சி இதற்கு காரணமாகும். மேலும் ஜலகாரகன் என்று சொல்லக்கூடிய சந்திரனானது அமெரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் 6 மற்றும் 8 ஆம் இடங்களில் சஷ்டாஷ்டக தோஷமுடன் விளங்கியதால் இப்படிப்பட்ட நீர் சம்பந்தமான உட்பாதங்களுக்கு (சீரழிவு) காரணம் என்று ஜோதிட வல்லுனர்கள் அன்றே எழுதி வைத்துள்ளனர்.

குருபகவான் வருகிற டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்று மகரராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயரும் போது மீண்டும் ஒரு சுனாமி அமெரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஏற்படும்.


இது மிதமாக இருந்தாலும் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி அன்று ஜல ராசியாக மீனத்துக்கு குரு பகவான் பிரவேசிக்கிறார். இதனால் இந்தியா மற்றும் அண்டை நாடுகளுக்கு சுனாமி ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. (ஓ-6)

## புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான தேக்கடி ஏரியில் படகு விபத்து

### 38 பேர் பலி; பலரைக் காணவில்லை

(தேக்கடி)

கேரள மாநிலத்தில் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான தேக்கடி ஏரியில் நேற்று முன்தினம் மாலை படகு கவிழ்ந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 38 பேர் பலியாயினர். மேலும் பலரை காணவில்லை. உடல்களைத் தேடி விடிய விடிய நடந்த தேடுதல் வேட்டையால் இந்த





சுற்றுலாத் தலம் சோகமானது.

தமிழக எல்லையை ஒட்டி அமைந்துள்ள கேரள இடுக்கி மாவட்டத்தில் தேக்கடி ஏரி உள்ளது. பெரியாறு வனவிலங்கு சரணாலயப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஏரியில் படகு துறை உள்ளது. ஜலகன்னிகா என்ற கேரள சுற்றுலாத் துறைக்கு சொந்தமான படகு நேற்று முன்தினம் மாலை 4 மணிக்குப் புறப்பட்டது.

இதில் வெளிநாட்டு மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்தனர். படகின் மேல்தளத்தில் 25 பேர், கீழ்தளத்தில் 49 பேர் மற்றும் படகோட்டி கள் இருவர் என 76 பேர் பயணம் செய்தனர்.

மாலை 5 மணியளவில் மணக்கவலை என்ற இடத்தில் படகு சென்ற போது யானைகள் மற்றும் வனவிலங்குகள் தண்ணீர் குடிக்க ஏரியின் ஒரு பகுதியின் கரைக்கு வந்தன. அவற்றை பார்க்கும் ஆவலில் அனைவரும் முண்டியடித்துக் கொண்டு படகின் ஒரு பகுதிக்கு சென்றனர்.

அப்போது காற்று வேகமாக வீசியது. படகின் ஒரு பகுதியில் அனைவரும் இருந்ததால் பாரம் தாங்காமல் படகு கவிழ்ந்தது. பயணிகள் அலறிய சத்தம் கேட்டு தூரத்தில் இருந்த மற்ற படகோட்டிகள் கம்பியில்லாத தந்தி மூலம் வனத்துறை மற்றும் சுற்றுலாத் துறைக்கு தகவல் தெரிவித்து விட்டு சுற்றுலாப் பயணிகளைக் காப்பாற்ற முயன்றனர்.

நீரில் மூழ்கியவர்கள் பலர் தங்களை காப்பாற்றிக் கொள்ள நீந்தினர். சிலர் தண்ணீரில் இருந்த மரங்களை பிடித்துக் கொண்டு உயிர் தப்ப முயன்றனர். வனத்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

நேற்று காலை 8 மணி வரை 38 உடல்கள் மீட்கப்பட்டன. உயிருக்குப் போராடிய ஆறு பேரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். படகை ஓட்டிச் சென்ற பெட்டி, அனீஸ் மற்றும் லண்டனைச் சேர்ந்த தம்பதிகள் ஜாக் மெர்லின் ஹாலிடே ஆகியோர் நீந்தி உயிர் தப்பினர். மற்றவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. உயிர் பலி அதிகரிக்கும் எனத் தெரிகிறது தொடர்ந்து தேடும் பணிகள் நடைபெற்றுவருகிறது. (ஓ-6)

## இலங்கை தமிழர்களை காப்பாற்றக்கோரி டெல்லியில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

### டாக்டர் கிருஷ்ணசாமி அறிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்களை காப்பாற்றக் கோரி, புதிய தமிழகம் கட்சி சார்பில் டெல்லியில் இன்று வெள்ளிக்கிழமை பேரணி, ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று டாக்டர் கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

புதிய தமிழகம் கட்சியின் நிறுவன தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் கடந்த 5 மாதங்களாக முள்வேலிக்குள் 3 இலட்சம் தமிழர்கள் நல்ல உணவு, குடிநீர், உடுக்க உடை, உறையுள் இல்லாமல் இலங்கை இராணுவத்தால் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். 21 ஆம் நூற்றாண்டில் எந்த பகுதியிலும் இது போன்ற சம்பவங்கள் நிகழவில்லை. இது உச்சக்கட்ட மனித உரிமை மீறல் பிரச்சினையாகும்.

தமிழர்களை முள்வேலியில் அடைத்து வைத்த சம்பவத்திற்கு மேலை நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் இது நாள் வரை இந்திய அரசு கண்டனம் தெரிவிக்கவில்லை. இது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல.

இதனைக் கண்டித்தும், கம்பிவேலிக்குள் முடங்கி கிடக்கும் 3 இலட்சம் தமிழர்களையும், அவரவர் இருப்பிடங்களுக்கு செல்ல இலங்கை அரசு அனுமதிக்க இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் டெல்லியில் பிரதமர் இல்லம் நோக்கி இன்று வெள்ளிக்கிழமை பேரணி நடைபெறும்.

இதில், சர்வதேச தமிழர் பாதுகாப்பு இயக்கம் மற்றும் மீனவர்கள், யாதவ மகா சபையை சேர்ந்தவர்கள் கலந்து கொள்கிறார்கள். பேரணி முடிவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரை சந்தித்து கோரிக்கை மனு கொடுக்க அனுமதி கேட்டுள்ளோம். அனுமதி கிடைத்தால் அவர்களை சந்தித்து மனு கொடுப்போம் என்றார். (ஓ-6)



## ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர்

# முதலாவது அரையிறுதியில் இன்று ஆஸி.-இங்கிலாந்து பலப் பரீட்சை

(சென்சூரியன்)

இங்கிலாந்து – அவுஸ்திரேலிய அணிகள் மோதும் சம்பியன்ஸ் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று சென்சூரியனில் நடைபெறவுள்ளது.

இதில் அண்மையில் இங்கிலாந்தில் நடந்த ஒரு நாள் தொடரில் 6-1 என்ற கணக்கில் இங்கிலாந்தை இலகுவாக வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி இன்றைய தினமும் இங்கிலாந்துக்குச் சவால் விடுக்கக் காத்திருக்கின்றது.

எனினும் எவரும் எதிர்பார்க்காத வகையில் இம்முறை தொடரில் அபாரமாகச் செயற்பட்டு வரும் இங்கிலாந்து அணி இன்றைய போட்டியை இலகுவாக விட்டுக் கொடுக்காது என எதிர்பார்க்கலாம்.

இதனிடையே இங்கிலாந்து அணியில் வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவட் பிரோட் காயத்துக்குள்ளாகியுள்ளார். இதனால் அவர் இன்று களமிறங்குவதில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இங்கிலாந்து விசேட விக்கெட் காப்பாளர் மெட் பிரியர் அரையிறுதியில் களமிறங்கக் காத்திருக்கின்றார்.

இதன் காரணமாக இன்றைய போட்டியில் ரவி பொப்ரா நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானுடனான லீக் போட்டியில் விளையாடிய அதே அணியுடன் களமிறங்கலாம் என நம்பப்படுகின்றது.

எனினும் காயமடைந்து நாடு திரும்பியுள்ள மைக்கல் கிளார்க்கிற்குப் பதில் டேவிற் ஹஸி அவுஸ்திரேலிய அணியில் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு ஆரம்பமாகின்றது.

## ஐ.சி.சி. விருது விழாவை புறக்கணித்தார் தோனி

(ஜோகனஸ் பேர்க்)

தென்னாபிரிக்காவில் நேற்று நடைபெற்ற ஐ.சி.சி. விருது வழங்கும் விழாவை இந்திய அணித்தலைவர் தோனி புறக்கணித்துள்ளார்.

சம்பியன்ஸ் தொடரில் அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இந்திய அணி இழந்ததால் அவர் அணி வீரர்களோடு தென்னாபிரிக்காவில் இருந்து நாடு திரும்புகிறார்.

ஐ.சி.சி விருதுக்கு 2 பிரிவுகளில் இந்திய அணித்தலைவர் தோனி பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணி ஆறுதல் வெற்றியுடன் தொடரில் இருந்து வெளியேறியது

(ஜோகனஸ் பேர்க்)

ஹோலியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

எட்டு அணிகள் மோதும் ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.




இதில் நேற்று ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 12ஆவது போட்டியில் இந்திய-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி குமார்-நெகரா ஜோடியின் வேகத்தில் 36 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சமி 23, பேர்னாட் 22,டௌவ்லின் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவீன் குமார் 9 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும்,நெகரா 8 ஓவர்களில் ஒரு ஓட்டம ற்ற ஓவர் உட்பட 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும்,ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும்,அணித்தலைவர் தோனி, மிஷ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஹோலியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 32.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 130 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் விராட் ஹோலி ஆட்டமிழக்காமல் 104 பந்துகளில் (9 பவுண்டரிகள்,2 சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 79 ஓட்டங்களையும்,கார்த்திக் 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரோஷ்,தோவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.இப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்ற போதும் தொடரில் 3 புள்ளிகளுடன் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பையிழந்தது.

இப் போட்டியில் ஆட்டநாயகனாக இந்திய அணியின் விராட்ஹோலி தெரிவானார்.

# பான் பசுபிக் டென்னிஸ் போட்டியில் ஷரபோவா காலிறுதிக்குத் தகுதி

(டோக்கியோ)

பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதியில் விளையாட முன்னாள் முதல் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா



தகுதி பெற்றுள்ளார்.

டோக்கியோவில் நடைபெற்றுவரும் பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா சக நாட்டு வீராங்கனை அலிசா கிளைபனோவாவை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஷரபோவா 2-6, 6-2, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்றார்.

இதன் மூலம் பான் பசுபிக் ஓபன் டென்னிஸ் போட்டியில் நான்காவது முறையாகவும் ஷரபோவா காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோன்று செர்பியாவின் முன்னணி வீராங்கனை ஜலீனா ஜங்கோவிக் தனது மூன்றாவது சுற்றுப் போட்டியில் எலீனா வென்ஸினாவை சந்தித்தார். இதில் ஜங்கோவிக் 6-1, 3-0 என்ற செட் கணக்கில் முன்னிலை பெற்றிருந்த போது வென்ஸினா காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்.

இதனால் ஜங்கோவிக் காலிறுதிக்கு முன்னேறினார். இதன்படி காலிறுதியில் ஜங்கோவிக் பிரான்ஸின் மரியோ பார்டோலியை எதிர்கொள்கிறார்.

ஏற்கனவே இந்தத் தொடரில் பங்கேற்ற வீனஸ் வில்லியம்ஸ், டினாரா சபீனா, சுவெட்லானா குஸ்னெட்சோவா, எலீனா டெமன்டீவா ஆகிய முன்னணி வீராங்கனைகள் ஆரம்ப சுற்றிலேயே தோல்வியைச் சந்தித்து வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.






**வலி. தென்மேற்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தின விழா வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.**

**இந் நிகழ்வில் சிறுவர்கள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் விழா மண்டபத்திற்கு ஆசிரியர்களினால் அழைத்துச் செல்லப்படுவதை படங்களில் காணலாம்.**

## மினிக்கச்சேரி நடத்தியவர்...

குறித்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட யாழ். போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரின் உதவியுடன் மேலும் 8 பேரைக் கைது செய்துள்ளனர்.

முதலில் கைது செய்யப்பட்டவரிடமிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் சட்டவிரோதமாக சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்து விநியோகிக்கும் மினிக்கச்சேரியை நடத்தி வந்தவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்த இறப்பர் முத்திரைகள், சட்டவிரோத சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிக்கும் அட்டைகள் மற்று ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் இவ்வாறு மினிக் கச்சேரி நடத்துவதற்கு உடந்தையாகவிருந்த யாழ். மாவட்ட செயலக பதிவாளர் அலுவலக ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இம்மூவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சட்டவிரோதமான சாரதி அனுதிப்பத்திரம் பயன்படுத் திய, யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாரால் மேலும் 6பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்வாறு சட்டவிரோதமாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்று பயன் படுத்தி வருபவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பொலிஸ் நிலையர்ப் பொறுப்பதிகாரி லெவனஹம தெரிவித்தார். (ச)

## ஈழத்தமிழரின் பிரச்சினை...

தமிழ் நாட்டில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று அண்மையில் தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

அந்தத் தீர்மானத்தின் பிரதியையும் முதல்வர் மு.கருணாநிதி வழங்கிய கடிதங்களை யும் டி.ஆர்.பாலு பிரதமரிடம் வழங்கினார். முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் நிலை அறிந்தவரை தமிழ் நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அங்கு அனுப்புவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் டி.ஆர்.பாலு மீண்டும் வலியுறுத்தினார்.

அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் படும் எனப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்தார் என டி.ஆர்.பாலு தெரிவித்தார். அத்துடன் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துத் தமிழ் நாடு முதல்வர் மு.கருணாநிதியுடன் பேச்சு நடத்துவதற்கு உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை ஓரிரு நாள்களில் சென்னைக்கு அனுப்பி வைப்பதாகவும் பிரதமர் உறுதியளித்துள்ளதாக பாலு மேலும் தெரி வித்தார். (ச-5)

## நாட்டின்...

எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை காலி மாவட்டத்தில் மாத்த லாகம நாககொட மற்றும் பிரிகல ஆகிய பிர தேசங்களிலும் கடும் காற்று வீசியதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய தேசிய தொடர்பாளர் கேணல் கீர்த்தி எக்க நாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை யாழ்.குடாநாட்டில் நேற்று முதல் பலத்த காற்று வீசுகின்றமையால்கரையோரப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். (ச-14)

## ஏற்றுமதி வரிச்சலுகை...

வாக்குகள் அரசுக்குத் தேவைப்படுகின்றன வாம் என்றார் லால்காந்த.

கடந்த 3 ஆண்டுகளில் ஊடகவியலாளர்கள் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அந்தக் கொலைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு அரசு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அரசியல்பிரச்சினைகள் காரணமாக குறைந்தது 50 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். அவர்களின் பெயர் விபரங்களும் தற்போது தங்கி இருக்கும் இடங்கள் பற்றிய விபரங்களும் என்னிடம் இருக்கின்றன.

ஏற்றுமதி வரிச் சலுகையை வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது.

ஆடைத் தொழில் நாட்டுக்கு வருமானம் பெற்றுத்தரும் இரண்டவது பெரியதுறை.

ஆயிரக்கணக்காண தொழிலாளர்கள் அதில் பணியாற்றுகிறார்கள் இவ்வாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எல்.டி.லால்காந்த மேலும் தெரிவித்தார். (ச-5)

## தீவகத்தைச்...

தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டு நாளை கடற்படையினரின் பாதுகாப்பு அனுமதி பெறப்பட்டு உறவினர்களிடம் கையளிக் கப்படுவர் எனவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்ட மக்கள் நேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். (ச-5)

## பாதுகாப்புச் செயலர் கோத்த...

வந்தார். ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தனது சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷவை சந்திக்குமாறு றொபர்ட் ஓ பிளேக்கிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையிலேயே பிளேக் இந்த சந்திப்பை நிராகரித்துள்ளார்.

றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திக்க கோத்தபாய ராஜபக்ஷ 4 முறைக்கு மேல் முயற்சித்துள்ளதாக ராஜதந்திரத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடக அடக்கு முறை தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரத்தைக் குறைக்கும் நோக்கில் கோத்தபாய, றொபேர்ட் ஓ பிளேக்கிடம் சந்தித்து தெளிவுப்படுத்த எண்ணியிருந்ததாக கூறப்படுகிறது.

அமெரிக்க துணை ராஜாங்க செயலாளர் உள்ளிட்ட அந்த நாட்டு அதிகாரிகள், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்திப்பதை நிராகரித்தானது, இலங்கையை சர்வதேச சமூகத்திற்கு மத்தியில் மேலும் தனிமைப் படுத்தும் என இந்த தகவல்களை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ அந்நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்ததனை அடுத்தே இலங்கை தொடர்பான அறிக்கை காங்கிரசில் சமர்ப்பிப்பது ஒத்திவைக்கப்பட்டதாக முன்னர் தகவல்கள் வெளியாகி இருந்த போதும் அது வல்ல யதார்த்தம் என்பது இப்போதெரியவந்தள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கண்ணி வெடி...

களில் இந்த நிதி உதவிக் கான இணக்கம் காணப்பட்டது என ஐ.நா. அறிக்கை தெரிவிக்கிறது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிறைவேற்று குழுக் கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றது. அதில் பங்கெடுக்கச் சென்ற சமயமே அமைச்சர் மகிந்த சமரசிங்க தூதுவரைச் சந்தித்துப் பேசுயுள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்டம் முகமாலையிலும் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ச-5)

## புலிகளுக்கு தார்மீக ஆதரவு...

தெளிவற்றதாக இருக்கின்றது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக அமெரிக்க அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது. அரசின் மனுவை ஏற்றுக்கொண்டுள்ள உச்ச நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை மீளாய்வு செய்ய இணங்கி உள்ளது. விசாரணைகளை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவது என்றும் தீர்மானித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் இந்தச் சட்டம் குறித்து கவனம் செலுத்துவது இதுவே முதல் தடவையாகும். வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கங்கள் என வரையறுக்கப்பட்ட அமைப்புகளுக்கு எந்த ஒரு உதவியையும் சேவையையும் அமெரிக்கக் குடிமக்கள் வழங்குவதைத் தடை செய்கின்றது. பயிற்சிகள், நிபுணர்களின் ஆலோசனைகள் அல்லது உதவிகள் என எதுவாக இருப்பினும் அவை இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களே.


குற்றம் நிரூபிக்கப் பட்டால் 15 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை வழங்கப்பட முடியும்.

இந்தச்சட்டத்தின் கீழ் ஒரு நபர் தீவிரவாதச் செயல்களிலோ வன்முறையிலோ ஈடுபடுவதற்கான உள்நோக்கங்களைக் கொண்டிருந்தார் என்று நிரூபிப்பதற்கான வேறு ஆதாரங்கள் வழங்கப்படத் தேவையில்லை. (ச-5)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா சிவபாதசுந்தரம்- (சாரதி)

### (செம்பும் குடையும்)



பலாலியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாதசுந்தரம் நேற்று (01.10.2009) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா, சின்னாட்சிப்பிள்ளையின் மூத்த மகனும், சிவபாக்கியம், மனோகரி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் நடராஜா-பரமேஸ்வரியின் அன்பு மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், சிவசக்தி (ஜேர்மனி), சிவகுமார் (ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), சிவநாதன் (லண்டன்), சிவகலை, சிவர்ாமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், சந்திரிக்கா, குணசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலாஸ், ஆராதனா, ஜஸ்விகா, டிலக்சன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.10.2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3718)

## திருமதி பெருமைனையினார் உமாதேவியார்

### (கந்தர்மடம், யாழ்ப்பாணம்)



மூளாயைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பெருமைனையினார் உமாதேவியார் 01.10.2009 நேற்று வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-அன்னமுத்து ஆகியோரின் புதல்வியும், பெருமைனையினாரின் அன்பு மனைவியும், கிருஸ்ணராஜா, சோதிமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், அன்னலிங்கத்தின் மாமியாரும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் இராஜசேகரம், ராயு, தினேஸ்றேமன் (யாழ். மாநகர சபை ஊழியர்), பாமினி, தயாளன் (சுவுதி), ஆதித்தன் (டோகா), அரவிந்தன் (மாணவன், யாழ். பல்கலைக்கழக உயிரியல் பிரிவு), சசிகலா, தர்சா, துஸ்யந்தினி, வேல்குமார் (பொது முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம் மானிப்பாய்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தவசீலன், தர்மிலன், சாருதன், தாரங்கன், பிருந்திகா, பிறிமிகன், பிரீர்திகன், ரதுஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 02.10.2009 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம் வீதி,
கந்தர்மடம்.

(3719)

தகவல்;
வ.அன்னலிங்கம் (மருமகன்)

குமரன் சில்க்ஸ்
Kumaran Silks
ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு
தீபாவளி அதிர்ஷ்டம்
(நேற்றைய விளம்பரத்தில் சிறு மாற்றம்)
02.10.2009 முதல் 17.10.2009 வரையான காலப்பகுதியில் 5000 /= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு குலுக்கல் முறையில் (சிட்டை இலக்கம் மூலம்) பரிசில்கள் வழங்கப்படும்.
1ம் பரிசில் – மின்விசிறி
2ம் பரிசில்– CD பிளேயர்
3ம் பரிசில்– சாறி (2500 /= பெறுமதி)
மேலும் 10 ஆறுதல் பரிசில்கள்,
பரிசில் விபரம் தீபாவளி மறுதினம் அறிவிக்கப்படும்.
குமரன் சில்க்ஸ்
இல: 2 A, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(3717)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.